
# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

01.05.2019





ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா

வைகாசி - ஆனி
புதுமலர்: 16
இதழ்: 03

## பேதுருவின் சிறந்த மாற்றத்துக்கான இயேசுவின் சிறப்பான நடத்துதல்கள் நான்கு

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# அனல்

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. கவிதை
04. வாலிபர் வளாகம்
05. தேவபணியாளர் பட்டறை
06. பெண்கள் பக்கம்
07. சிறுவர் வட்டம்
08. நற்செய்திப்பகுதி
09. அருட்பணியாளர் சரிதை
10. குறுக்கெழுத்துப்போட்டி - 91
11. அனலின் ஆன்மீக விருந்து
12. வினா விடை - 92
13. சந்தோஷம் இல்லை


## ஜெப வேண்டுதல்



வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.



T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் குரல்

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மறுபடியும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பிரசங்கி 7:29 கூறுகின்றது: இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அனேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்.**

தேவனுடைய செயல்கள் அனைத்துமே செம்மையான வைகள் தான். மனிதனையும் செம்மையாகவே உண்டாக்கினார். கர்த்தர் குறைவில்லாது செயலாற்றுபவர். மனிதனையும் அவர் குறைவோடு உண்டாக்கவில்லை. ஆனால் மனிதன் தேவன் கொடுத்த நிறைவில் மகிழ்ச்சியடையாமல் போலியான நிறைவைத் தேடினான்.

அருமையானவர்களே கர்த்தர் உங்களை சரியான விதங்களில் ஆசீர்வதித்திருக்கிறார் என்பதையும், உங்களுக்குரிய வைகளில் எந்தக் குறைவையும் வைக்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். முதல் மனிதனாகிய ஆதாம் தேவனுடைய நிறைவில் இருந்து வாழ்வதற்கான வழியை விட்டுவிட்டபடியால் ஏதேனில் இருந்து துரத்தப்பட்டான். நாமும் உபாய தந்திரங்களைத் தேடிக்கொள்ளாமல் தேவவார்த்தையின் வெளிச்சத்தில் நடப்போம்.

தேவன் செம்மையானவனாக மனிதனை உண்டாக்கி னார். ஆனால் மனிதனோ பாவத்தில் வீழ்ந்தான். மறுபடியும் இயேசு கிறிஸ்து மனிதனை மீட்கும் கிருபாதார பலியாக வந்து மனித மீட்புக்காக தன்னை அர்ப்பணித்து மனிதனுக்கு கொடுத்த இரட்சிப்பும் அது செம்மையானது. எனவே நீங்கள் மறுபடியும் புதிய மனிதர்களாக, செம்மையான மனிதர்களாக வாழவும் கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குள் வாழும்போது.

– ஆசிரியர் –







❒ வை. விமலதாஸ்

சிறுவயதில் நான் மிகுந்த சுயநலக்காரனாய் இருந்தேன். நல்ல பொருள் எதுவாக இருந்தாலும், எது கிடைத்தாலும் அதை நானே கைப்பற்றிக் கொள்வேன். இந்தக் குணத்தின் காரணமாகவே, மெதுவாக எல்லோரும் என்னைவிட்டு விலக ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் எனக்கு நண்பர்களே இல்லாமல் போய்விட்டார்கள். நானோ என் மீது தவறு இருக்கிறது என்றே நினைக்கவில்லை. மற்றவர்களைக் குறை சொல்லிக் கொண்டிருந் தேன். அந்தச் சமயத்தில் என் அப்பா எனக்குக் கற்றுக் கொடுத்த மூன்று வாக்கியங்கள் தான் வாழ்க்கையில் எனக்கு உதவியாக இருந்தன.

ஒரு நாள் அப்பா, இரண்டு அகலமான பாத்திரங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். அந்த இரண்டையும் சாப்பாட்டு மேஜை மேல் வைத்தார். ஒரு பாத்திரத்திலிருந்த நூடுல்ஸின் மேல் மட்டும் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது. இன்னொன்றின் மேல் முட்டை வைக்கப்படவில்லை. அப்பா என்னிடம் கேட்டார்... கண்ணு.. உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ அதை நீயே எடுத்துக் கொள்! என்றார். அந்த நாட்களில் முட்டை கிடைப்பது அரிதாக இருந்தது. புத்தாண்டின் போதோ, பண்டிகைகளின் போதோ தான் எங்களுக்கு சாப்பிட முட்டை கிடைக்கும். எனவே நான் முட்டை வைத்திருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன்.

அப்பாவும் நானும் சாப்பிட ஆரம்பித்தோம். என்னுடைய புத்திசாலித்தனமான முடிவுக்காக எனக்கு நானே என்னைப் பாராட்டிக் கொண்டேன். முட்டையை ஒரு வெட்டு வெட்டினேன். என் தந்தை அவருடைய கிண்ணத்தை எடுத்து சாப்பிட ஆரம்பித்த போது எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அவருடைய கிண்ணத்தில் நூடுல்ஸ்க்கு அடியே இரண்டு முட்டைகள் இருந்தன. அதைப்பார்த்துவிட்டு நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவுக்காக என்னை நானே திட்டிக்கொண்டேன். அப்பா மென்மையாகச் சிரித்தபடி என்னிடம் சொன்னார்...

"மகனே நினைவில் வைத்துக் கொள்... உன் கண்கள் பார்ப்பது உண்மையில்லா மல் போகலாம். மற்றவர்களுக்குக் கிடைப்பதை நீ அடைய வேண்டும் என்று நினைத்தால் இழப்பு உனக்குத் தான்".

அடுத்த நாளும் என் அப்பா இரண்டு பெரிய கிண்ணங்கள் நிறைய நூடுல்ஸ் சமைத்துக் கொண்டுவந்தார். அதைச் சாப்பாட்டு மேஜையில் வைத்தார். முதல் நாளைப் போலவே ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸின் மேல் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது. இன்னொன்றில் முட்டை வைக்கப்படவில்லை. அப்பா என்னிடம் கேட்டார், மகனே... உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, அதை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்! இந்த முறை நான் கொஞ்சம் புத்திசாலித்தனமாக யோசித்தேன். முட்டை வைக்கப்படாத கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

நூடுல்ஸை அள்ளும் குச்சியால், கிண்ணத்துக்குள் அடிவரைக்கும் எவ்வளவு துழாவிப் பார்த்தும் ஒரு முட்டை கூட கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி சொன்னார்... மகனே.. எப்போதும் அனுபவங்களின் அடிப்படையில் ஒன்றை நம்பக் கூடாது. ஏனென்றால் சிலநேரங்களில் வாழ்க்கை உன்னை ஏமாற்றக்கூடும். தந்திரத்தில் விழ வைக்கும். இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்.

மூன்றாவது நாள், அப்பா மறுபடியும் இரு பெரிய கிண்ணங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். இரு கிண்ணங்களையும் மேஜையின் மேல் வைத்தார். வழக்கம் போல ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸில் முட்டை; மன்றொன்றில் இல்லை. அப்பா கேட்டார்... மகனே நீயே தேர்ந்தெடுத்துக் கொள். உனக்கு இவற்றில் எது வேண்டும்? இந்த முறை அவசரப்பட்டு கிண்ணத்தை எடுத்துவிடாமல் நான் பொறுமையாக அப்பாவிடம் சொன்னேன்...

அப்பா நீங்கள் தான் இந்தக் குடும்பத்தின் தலைவர். நீங்கள் தான் நம் குடும்பத்திற்காக உழைக்கிறீர்கள். எனவே, முதலில் நீங்கள் உங்களுக்கான கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் எடுத்துக் கொள்கிறேன் என்றேன். அப்பா என் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. முட்டை இருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக்கொண்டார். நான் எனக்கான நூடுல்ஸை சாப்பிட ஆரம்பித்தேன். நிச்சயமாக இந்தப் பாத்திரத்தில் முட்டை இருக்காது என்று தான் நினைத்தேன். ஆனால் அன்றைக்கும் எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கிண்ணத்தில் அடியில் இரண்டு முட்டைகளிலிருந்தன.

அப்பா கண்களில் அன்பு கனிய என்னைப் பார்த்தார். பிற்பாடு புன்முறுவலோடு சொன்னார்: மகனே, நினைவில் வைத்துக்கொள். மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும் போதெல்லாம் உனக்கும் நல்லதே நடக்கும்.

ஆம் நண்பர்களே இந்த சம்பவத்தில் வருவதைப் போன்று நாமும் எத்தனை தடவை சுயநலமாகவே நம் வாழ்நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறோம். இயேசு சொன்னார்: **லூக்கா 6:31 மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.** நாம் ஒரு காரியத்தை பார்த்துவிட்டால் அதற்கு நாம் வேறு அர்த்தத்தைக் கற்பித்து அந்தக் காரியத்தை அப்படித்தான் என்றே கூறிவிடுவோம். அல்லது எமது அனுபவங்களின் அடிப்படையில் மற்றவர்களின் உண்மையான காரியத்தைப் புரிந்து கொள்ளாமல் அதன் அடிப்படையிலும் கூறிவிடும். இதனால் நாம் நினைத்ததை சாதித்துவிட்டோம் என்று ஆரம்பத்தில் மகிழ்ந்தாலும் இறுதியில் அது எமக்கு மிகுந்த வருத்தத்தைத் தான் கொண்டு வரும். எல்லாக் காரியங்களையும் நம்முடைய பரமபிதாவிடத்தில் கொடுத்து அவர் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்வதே எமக்கு சிறப்பானதாகும்.



# கர்த்தர் வைத்த மரங்கள்

கர்த்தர் வைத்த மரங்களைக்
காற்று ஒருக்காலும் அழிக்காது;
காற்று கிழக்கு மேற்குமாக அடிக்கிறது,
மரங்களின் இலைகளுக்கு ஓய்வு இல்லை
ஆனால் கர்த்தர் வைத்த நாற்றுகளுக்கு
எந்தக் காற்றும் நல்லதே.
அவைகள் ஆழமாய் வேர் வைத்து வளர்ந்து,
அகலக் கிளைகள் விட்டு நிற்கும்,
கர்த்தர் அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்.



கர்த்தர் அறிந்த மரத்தை
எந்தப் புயலும் முறிக்காது;
அதிரும்படியும், பலத்த மழையும்,
எரிக்கும் மின்னலும், பெருங்காற்றும்,
முடிந்த பின்னும் அது நிற்கும்
கர்த்தர் அறிந்த மரம்
எல்லாப் புயலையும் தாங்கும்
தொடக்க முதல் முடிவுவரை
அழகு பெற்று வளரும்.



(நன்றி: பாலைவன நீரோடைகள் ஜனவரி 15)



# எது உங்களுக்கு வேண்டும்?

போதகர் வை.தேவதாஸ்




கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் மறுபடியும் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**தேவகிருபை மட்டும் எம்மோடு இருக்காதுவிட்டால் நாம் இவ்வளவு தூரம் பயணித்திருக்க முடியாது. அவரது கிருபை ஒன்றே உங்களையும் என்னையும் தாங்கி வழிநடத்தி வருகிறது. அந்தக் கிருபையுள்ள தேவனிற்கு கோடி நன்றிகள்.**

மேலும் **தானியேல் 6:28 தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது** என்ற வேத வாக்கியத்தின்படி உங்கள் தொழிற்காரியங்கள், படிப்புக்காரியங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கை என்பன தேவ சித்தத்திற்குள் ஜெயமாயிருக்க ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சோர்ந்து போக வேண்டாம். இந்த வாக்குத்தத்தை விசுவாசித்து இவ் வசனத்தைச் சொல்லி கருத்தாக ஜெபம் பண்ணுங்கள். நிச்சயம் அடுத்த சஞ்சிகை நீங்கள் வாசிக்கும் போது ஒரு சாட்சியோடு இருப்பீர்கள்.

கடந்த சஞ்சிகையில் வெளிவந்த செய்தியானது உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருந்துள்ளது என்பதை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. தேவனிற்கே மகிமை செலுத்துகின்றேன். தொடர்ந்து இப் பகுதியினையும் ஜெபத்துடனும் பொறுமையுடனும் வாசியுங்கள். தேவன் உங்களை சந்திப்பாராக!

# நீங்கள் காணும் செழிப்பான பகுதியா?... அல்லது???...

ஆம் அருமையான சகோதர சகோதரிகளே! தெரிவு செய்யும் வேளை என்பது எமக்கு வரும் போது நாம் மிகச் சிறப்பானதைத்தானே தெரிவு செய்வோம். எமது படிப்பு, தொழில், வாழ்க்கை எனப்பார்க்கும் போது யார் தான் இரண்டாம் தரமாகக் காணப்படுபவைகளைத் தெரிவு செய்வார்கள்? முதற்தரத்தைத் தான் எல்லோரும் தெரிவு செய்வார்கள்.

இதனைத் தான் வேதாகமத்தில் ஓர் மனிதன் செய்தார். அவரைக் குறித்து தான் இந்தப் பகுதியில் பார்க்கப் போகிறோம். அவரது பெயர் உங்களுக்கு தெரியும். லோத்து *(Lot)* என்பதே அவரது பெயராகும். இவரது வாழ்வைக் குறித்து ஏற்கனவே பல தேவ செய்திகள் மூலமாகவோ அல்லது புத்தகங்கள் மூலமாகவோ நீங்கள் அறிந்திருக் கலாம். ஆகையால் தொடர்ந்து வாசிப்பதை நிறுத்திவிடாமல் அல்லது மேலோட்டமாக வாசிக்காமல் வாஞ்சையுடன் கருத்தூன்றிப் படிக்குமாறு வேண்டுகின்றேன்.

முதலில் இவரது நற்காரியங்கள் அல்லது நற்பண்புகளைக் குறித்து சற்று விளக்கமாக பார்க்கலாம்.

## 01. தனது உறவு முறையான ஆபிரகாம் உண்மையான தேவனைத் தெரிந்து கொண்டதை அறிந்து தானும் அவரைப் பின்பற்றினார்

**ஆதியாகமம் 12:4a கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். லோத்தும் அவனோடேகூடப் போனான்.** தெய்வ பக்தி நிறைந்த உறவினராகிய ஆபிரகாமோடு வாழும் சிலாக்கியத்தை லோத்து பெற்றிருந்தார். மட்டுமல்ல கர்த்தர் தனக்குச் சொன்னபடியே ஆபிரகாம் புறப்பட்டுப்போனார். போகுமிடம் தெரியாவிட்டாலும் தேவனுக்கு கீழ்ப்படிந்து, விசுவாசத்துடன் அவர் சென்றார். உற்றார், உறவினரைவிட்டு வசதியான வாழ்க்கையைவிட்டு தெரியாத இடத்திற்கு செல்வது என்பது அக் காலத்தில் மிகவும் கடினமான செயலாகும். ஆனாலும் ஆபிரகாம் தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார்.

**இவைகளை அவதானித்த லோத்து ஆபிரகாமோடு கூட அக்கடின பிரயாணத்தை மேற்கொள்ள தன்னை அர்ப்பணித்தார். ஆபிரகாமின் விசுவாசத்தை லோத்து ஆமோதித்து செயற்படுவதனைக் காண்கிறோம்.**

ஆம்! அருமையான வாலிபரே சில வேளை உங்கள் அப்பா தேவ ஊழியராக இருப்பது, அல்லது உங்கள் உறவினர்கள் தேவ பக்தியுள்ளவர்களாக இருப்பது உங்களுக்கு கிடைத்த பெரிய பாக்கியமே. அவர்கள் மூலமாக நீங்களும் அந்த உண்மையான தெய்வத்தை தெரிந்து கொண்டு அந்த தேவனிற்கு தொடர்ந்து சாட்சியாக வாழுங்கள். அவரது கிருபை எப்போதும் உங்களை நடத்தும். **மாத்திரமல்ல என் குடும்பத்திலோ, உறவு முறையிலோ யாரும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள வில்லை, நான் மட்டும் தான் தேவனை அறிந்திருக்கிறேன். எனக்கு யார் வழிகாட்டு வார்கள் என ஒருவேளை நீங்கள் ஏக்கத்தோடு காணப்படலாம். கலங்காதிருங்கள்!**

நானும் எனது 13வது வயதில் யாருடைய ஆதரவும் இல்லாமலே சபைக்கு சென்றுவந்தேன். இக் காலப்பகுதியில் இரட்சிக்கப்பட்டேன். என் குடும்பத்தில் ஒன்பது உறுப்பினர்கள் இருந்தும் யாரும் அப்பொழுது இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கவில்லை. தேவன் கிருபையாக என்னை நடத்தினார். இப்பொழுது எனது குடும்பத்தில் உள்ள அனைவருமே இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆம்! நிச்சயமாய் தேவன் உங்கள் குடும்பத்தை இரட்சிப்பார்; நீங்களும் ஒரு நாள் சாட்சி சொல்லும்படி தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**அப்போஸ்தலர் 16:31 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.** மனந்திரும்ப விரும்புகிற எவராயினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதே இரட்சிக்கப்படு வதற்கு செய்ய வேண்டிய காரியம் ஆகும். அதே நேரம் இவ் வசனத்தில் உள்ள வாக்குத்தத்தத்தை நீங்கள் உங்களுக்கென உரிமை பாராட்டி அதற்காக ஊக்கமாக ஜெபித்து செயற்படும் போது உங்கள் குடும்பம் இரட்சிக்கப்படுவதை பார்த்து நீங்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

எனவே லோத்து தனது உறவினர் மூலமாக தேவனை அறிந்து கொண்டது மாத்திரமல்ல; அந்த தேவனை பின்பற்றுகிறவனாகவும் இருந்துள்ளார் என்பதை முதலாவது பார்த்த நாம் அவரது இரண்டாவது நற்பண்பைக் குறித்தும் ஆராய்ந்து பார்ப்போம்.

## 02. தன் வீட்டிற்கு வந்தவர்களை ஏற்றுக்கொண்டு; அவர்களை உபசரிக்கிறவராக இருந்தார்

**ஆதியாகமம் 19:3 அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்.** வந்தவர்களை மிகவும் அன்பாக விசாரித்து அவர்களை போஷிக்கின்ற நல்மனிதராக லோத்து காணப்பட்டார்.

ஆம் பிரியமான வாலிபர்களே, வாலிப வயதினில் வீட்டில் நிற்பதற்கு கூட உங்களுக்கு நேரம் போதாமல் காணப்படலாம். வேலை, படிப்பு, விளையாட்டு, சுற்றுலா என நீங்கள் பரபரப்புடன் காணப்படலாம். இருப்பினும் **எபிரெயர் 13:2 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.** என்ற வேத வசனத்தைக் கைக்கொள்ள மறவாதிருங்கள். அந்நியரை உபசரிக்கும் பண்பானது இக் காலத்தில் மிகவும் குறைந்து வருகின்றது. இப்படியான சூழ்நிலையில் வாலிபர்களாகிய நாம் அந்நியரை குறிப்பாக தேவபிள்ளைகளை உபசரிக்கவும் அவர்களுக்கு எமது வீட்டில் இடம் கொடுக்கவும் முன்வரவேண்டும்.

இப்படியொரு கற்பனைக் கதையுண்டு, மிகுந்த தேவ பக்தியுள்ள ஒரு குடும்பத்தின் காலை ஜெபவேளையில் "இன்று நான் உங்கள்

வீட்டிற்கு வருவேன், ஆயத்தமாக இருங்கள்" என இயேசு சொன்னாராம். இவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போய்விட்டது. மிகுந்த உற்சாகமாக தங்களது வீட்டினை சுத்தப்படுத்தி அழகுபடுத்தினார்கள். தங்களையும் சுத்தப்படுத்தி அழகுபடுத்தினார்கள். நல்ல சுவையான உணவுகளையும் தயார் செய்து இயேசுவின் வருகைக்காக காத்திருந்தார் கள். காலை 10மணியளவில் மேலாடை இல்லாத ஓர் ஏழை மனிதன் அவர்கள் வீட்டிற்கு வந்தான். என்ன? என இவர்கள் கேட்ட போது எனக்கு உடுப்பதற்கு ஆடை இல்லை, ஏதாவது ஆடை இருந்தால் கொடுங்கள் என்று கேட்டான். இவர்களும் இன்று எமது வீட்டிற்கு இயேசு வரப்போகிறார், சீக்கிரம் வெளியே போய்விடு என அவனைத் துரத்திவிட்டார்கள். மறுபடியும் மதியம் 1மணிக்கு ஓர் பிச்சைக்காரன் பசியாய் இருக்கிறது, சாப்பாடு தாருங்கள் என்று கேட்டான். முதலாமவரை விட்டியது போன்று இவரையும் வெறுமையாக விரட்டிவிட்டு இயேசுவின் வருகைக்காக காத்திருந்தனர். மறுபடியும் மாலை 4மணிக்கு கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒருவர் உதவி கேட்டு வந்தபோது அவரும் சீக்கிரமாகவே வெளியேற்றப்பட்டார். இவர்கள் காத்திருந்து காத்திருந்து ... சோர்வடைந்து இறுதியில் இரவு ஜெபத்தில் ஒன்றுகூடி ஜெபித்து தேவனிடம் கேட்டனர். இயேசுவே வருகின்றேன் எனச் சொல்லிவிட்டு ஏன் நீர்வரவில்லை. ஆண்டவரே ஏன் எங்களை ஏமாற்றினீர்? என ஜெபித்த போது மறுபடியும் இயேசுவின் சத்தம் கேட்டதாம். அவர் சொன்னார் பிள்ளைகளே "நான் உங்களை ஏமாற்றவில்லை, நீங்கள் தான் என்னை ஏற்றுக்கொள்ள வில்லை, இன்று மூன்று தடவை உங்கள் வீட்டிற்கு வந்தேன்" என்றார். இவர்களோ, இல்லவே இல்லை எப்படி நீங்கள் வந்தீர்கள்? எனக்கேட்ட னர். இயேசு சொன்னார், முதலில் ஆடை கேட்டு வந்தேன், இரண்டாவது உணவு கேட்டுவந்தேன், மூன்றாவது உதவி கேட்டுவந்தேன் நீங்கள் தான் என்னை விரட்டியடித்துவிட்டீர்களே என்றாராம். அப்பொழுது தான் அவர்கள் தங்கள் அறியாமையை உணர்ந்து மனவேதனை அடைந்தார்கள்.

ஆம் தேவ வசனத்தைக் கவனியுங்கள், **மத்தேயு 25:42-43 (42.) பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; 43. அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்.** எனவே வாலிபர்களே! பசி, தாகம், ஆடையின்மை, அந்நியனாயிருத்தல், நோய், சிறைவைக்கப்படுதல் ஆகியவற்றில் இருக்கும் கிறிஸ்துவின் சகோதரருக்கு உதவுவது நமது கடமையாகும். அப்படி நாம் உதவி செய்யாதுவிட்டால் அதனை தனக்கே செய்யவில்லையென நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். எனவே தேவையில் இருப்பவர்களிற்கு உதவி

செய்ய ஒருபோதும் மறவாதிருங்கள். வந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களை உபசரிக்கும் நற்பண்புள்ளவராக லோத்து காணப்பட்டார்.

## 03. தனது நகர மக்களின் பாவ வாழ்க்கையைக் கண்டு இருதயத்தில் வேதனையுடன் இருந்த நீதிமானாக காணப்பட்டார்

**11பேதுரு 2:7-8 (7.) அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; 8. நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க;** ஆம் லோத்தின் நீதியைக் குறித்து இவ் வசனம் தெளிவாக குறிப்பிடுகிறது. லோத்து சோதோம் கொமோரா என்னும் பட்டணத்தில் குடியிருந்தார். அப் பட்டண ஜனங்கள் வரம்பு மீறிய பாலுறவுப் பாவங்களை மிகுதியாகச் செய்து வந்தனர். அதனைக் கண்டும் கேட்டும் இருந்த லோத்து அம் மக்களின் கொடிய பாவங்களிற்காக வேதனைப்பட்டார்.

இன்றும் பாருங்கள் சோதோம் கொமோராவின் பாவங்கள் எமது தேசத்தில் மட்டுமல்ல, முழு உலகத்தையும் ஆட்கொண்டு வருகின்றது. ஆணோடு ஆணும், பெண்ணோடு பெண்ணும் சேருவதற்கு சட்டப்படியான அனுமதியைக் கூட சில நாட்டுச் சட்டங்கள் வழங்கியுள்ளன. இப்படிப்பட்ட அக்கிரமச் செயல்களை அறியும் பொழுது உங்கள் உள்ளம் வேதனைப்படுகிறதா? அதற்காக ஊக்கமாக ஜெபிக்கிறீர்களா? **எசேக்கியேல் 9:4 கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.** தேசத்தில் உள்ள அருவருப்புக்களுக்காக மனமுடைந்து கர்த்தரை நோக்கி ஊக்கமாக விண்ணப்பம் செய்கிறவர்கள் எக் காலத்திலும் இருந்துள்ளனர். அவ்வாறு இருப்பவர்களை கர்த்தர் முத்திரையிட்டு பாதுகாத்துவருகிறார்.

இதனை வாசிக்கின்ற சகோதர சகோதரிகளே, அக்கிரமம் நிறைந்து போன உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவைகளை நாகரீக வளர்ச்சி என கண்டும் காணாமல் இருக்க வேண்டாம். அதற்காக உங்கள் உள்ளம் உடையட்டும். மாத்திரமல்ல, முடிந்தால் இப்பொழுதே அக்கிரமம் நிறைந்த உலக ஜனங்கள் மனந்திரும்பும்படி ஜெபிப்பீர்களா? இதனை நான் அல்ல, உங்களை அழைத்த தேவன் விரும்புகிறார். **தயவு செய்து வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இந்த ஜனங்களிற்காக பாரப்பட்டு ஜெபிக்க முன்வருவீர்களா?** ஆண்டவர் தாமே உங்களை ஜெப பாரத்தினால் நிரப்புவாராக! ஆமென்.

என்ன வாசகர்களே, இவ் ஆக்கத்தை நீங்கள் வாசிப்பதோடு மட்டும் நிறுத்தாமல் பிறரும் வாசிக்கும்படியான வழிகளை ஏற்படுத்துங்கள். மாத்திரமல்ல, நிச்சயமாக உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கின்றேன். கடிதம் மூலமோ அல்லது, ஏதோ ஓர் வழியில் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 90
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

04. மீகாள் (11சாமு 6:23)
07. சாப்பாத் (11இரா 3:11)
09. எப்பிராயீம் (ஓசி 7:8)
11. அன்னாள் (லூக் 2:36)
12. தாவீது (11சாமு 3:32)

**வலமிருந்து இடமாக**


02. சகரியாவுக்கு (சகரியா 1:20)
05. எப்ரோன் (1நாளா 6:18)
08. சிபியாள் (11நாளா 24:1)
10. எலிசபாள் (யாத் 7:23)
11. அபிகாயில் (1சாமு 25:3)
13. அந்திப்பா (வெளி 2:13)

**மேலிருந்து கீழாக**

01. கமாலியேல் (அப் 5:38)
03. லேவியர் (நெகே 12:8)
06. லிவியாதான் (யோபு 41:18)

**கீழிருந்து மேலாக**

05. எலியா (1இரா 18:41)
09. எசேக்கியேல் (எசே 8:3)



# வினாவிடை - 92
## சரியான பதில்கள்



01. எலியா - ஆகாப் (1இராஜாக்கள் 18:45,46)
02. கேயாசி - நாகமான் (11இராஜாக்கள் 5:21)
03. தாவீதின் மனுஷர் (11சாமுவேல் 17:8)
04. மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான் (நீதிமொழிகள் 25:28)
05. தேவகிருபையை காமவிகாரத்துக்கேதுவாக புரட்டி இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள் (யூதா 4,11,12)
06. அதோனிபேசேக் (நியாயாதிபதிகள் 1:7)
07. வடக்கேயிருந்து வரும் ஜனம் (எரேமியா 6:22-23)
08. ஆரோன் (எண்ணாகமம் 16:47-48)
09. விபசார ஸ்திரீ (நீதிமொழிகள் 7:27)
10. நேசவைராக்கியம் (உன்னதப்பாட்டு 8:6)

# ஜெபவீடா? கள்ளர் குகையா?





திருமதி. J.பிலிப்

சகோதரியே உன்னைப் பார்த்து நீ கேட்க வேண்டிய ஒரு கேள்வி; "என் வீடு ஜெப வீடா? அல்லது ஒரு கள்ளர் குகையா?"

**ஏசாயா 56:7 நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே. அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.** இவ் வசனத்தின் கடைசி வரி கூறுகிறது. "என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு" எனப்படும். தேவன் வாசம் செய்யும் வீடு ஒரு ஜெப வீடு எனப்படும். ஒரு ஜெப வீட்டில் இருப்பது என்ன என்று சிந்திக்கிறாயா? அதே வசனம் கூறுகிறது; "என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்". உனக்கு மகிழ்ச்சி வேண்டுமா? இன்றைக்கே உன்னுடைய வீட்டை ஜெபவீடாக மாற்ற முயற்சி செய். அல்லது அது ஒரு கள்ளர் குகையாகிவிடும்.

**மத்தேயு 21:13 என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.** இப்படிப்பட்ட வார்த்தையை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மைப் பார்த்து சொல்லாதபடிக்கு நம்முடைய வீடுகளை ஜெபவீடாக்க முயற்சிப் போமாக. **அப்போஸ்தலர் 12:12 அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள்.** நிச்சயத்துடன் வந்தது யார்? ஏரோது ராஜாவினால் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட பேதுரு. இவர் எப்படி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். ஜெபவீட்டில் நடைபெற்ற ஜெபத்தின் வல்லமை தான் பேதுருவை விடுதலை செய்தது.



மாற்குவின் தாயாகிய மரியாள் இயேசுவை பின்பற்றியவர்களில் ஒருத்தி. அவளது வீடு ஜெபத்திற்கு திறந்து வைக்கப்பட்டிருந்தது. உன் வீடு எதற்காக அதிக நேரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது? **அவள் ஜெபத்தில் ஆர்வம் உள்ளவள்.** உன்னுடைய ஆர்வம் இன்னும் எதில் இருக்கிறது என்று சிந்தித்துக் கொள் சகோதரியே. மரியாள் **ஒரு ஜெபிக்கும் தாயாக இருந்ததினால் தான் மாற்கு தேவனால் அழைக்கப்பட்ட ஒரு ஊழியனாய் மாற்றம் பெற்றான்.** இந்த தாயானவள் கர்த்தருக்காக வைராக்கியமும் அன்பும் கொண்டிருந்தபடியால் தனக்கு ஆபத்து வரக்கூடும் என்று தெரிந்தும் தன் வீட்டை ஜெபவீடாக்கினாள். ஏனெனில் அந் நாட்களில் ஏரோது ராஜா சபையிலே சிலரை துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். அத்துடன் யோவானுடைய சகோதரனை கொலை செய்தான். மாத்திரமல்ல பேதுருவையும் கொலை செய்யும்படி சிறையில் வைத்திருந்தான். **அப்போஸ்தலர் 12:1-2 (1.) அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; 2. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.**

சிறையில் இருக்கும் பேதுருவுக்காய் தாயாகிய மரியாளுடைய வீட்டில் சபையார் ஊக்கத்தோடே ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். **அறை வீட்டிற்குள் ஜெபித்த வல்லமை தான் சிறைச்சாலையில் பேதுருவை விடுவிக்கும்படி தேவதூதனை அனுப்பியது.** சிறைச்சாலையில் இருந்த பேதுருவை தேவதூதன் சென்று விடுவித்தான். அப்போது பேதுருவின் கைகளில் கட்டப்பட்டிருந்த சங்கிலிகள் கழன்று விழுந்தன. விடுதலை அடைந்த பேதுரு ஜெபவீட்டின் வாசலுக்கு முன் நிற்கிறான். ஜெபித்துக் கொண்டிருந்தவர்கள் கதவைத் திறந்த போது பேதுருவைக் கண்டு பிரமித்தார்கள்.

சகோதரியே உன் வீட்டிலும் பிரமிக்கப்படக் கூடிய காரியங்கள் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறாயா? உன்னுடைய வீட்டை சுற்றிலும் பார். அது கள்ளர் குகையா? அல்லது ஜெபவீடா? தேவன் உன் வீட்டை கள்ளர் குகையாக அல்ல தேவன் தங்கும் ஜெபவீடாக மாற்ற விரும்புகிறார். **நீ ஆயத்தமா? நீயும் உன் வீட்டில் வாழ்பவர்களின் ஆவிக்குரிய நிலையை சற்று சிந்தித்துப்பார்.** கள்ளத்தனமான காரியங்கள் எல்லாவற்றையும் உன் வீட்டில் இருந்து அகற்றிவிடு. அப்போது மரியாளுடைய ஜெபவாஞ்சை உனக்குள்ளும் கடந்து வரும். அப்போது ஏரோதின் கைக்கு பேதுருவைத் தப்புவித்த தேவன் நீயும் ஊக்கத்தோடே மரியாள் போல ஜெபிக்கிற தாயாக இருந்தால் பிசாசின் பிடியில் இருக்கும் அநேக பிள்ளைகளை நீயும் தப்புவிக்க முடியும் என்பதை மறந்து போகாதே. ஜெபத்தின் வல்லமை பதிலை உன் கண்கள் காணும். அப்போது உன் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**நெகேமியா 8:10b கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான். யாக்கோபு 5:16b நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது.**





# வசனத்தின் வல்லமை

❑ ஜசிந்தா அக்கா




ஜெவ்றி தனது பெற்றோருக்கு ஒரே மகன். பெற்றோர் அவனை மிகவும் அன்பாக நேசித்து வந்தனர். ஆனால் ஜெவ்றியோ கீழ்ப்படியாதவனும், குழப்படிக்காரனுமாய் வளர்ந்து கொண்டு வந்தான். பாடசாலைக்கு ஒழுங்காக சென்று வருவான். மாலை நேரங்களில் நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவான். பின் வீடு திரும்பும் போது அவனுக்குப் பின்னாக அவனைப் பற்றிய முறைப்பாடுகளும் வீட்டை நோக்கி வந்தது. அவைகளைக் கேட்ட பெற்றோரின் உள்ளம் அதிக வேதனை அடைந்தது. **"தேவனே ஜெவ்றியை நீரே மனம் மாறச் செய்ய வேண்டும்"** என்று தேவனிடத்தில் அழுதார்கள்.

பின்பு ஜெவ்றியின் தகப்பனார் அவனை அழைத்து ஜெவ்றி, **"இயேசப்பாவை சிலுவையில் அறைந்தது எது?"** என்று அன்பாகக் கேட்டார். அவன் சடார் என்று **"நான் அறையவில்லை"** என்றான். உன்னோடே கூட விளையாடும் பிள்ளைகளை நீ கேலி செய்து, அவர்களைக் கால்தடம் போட்டு விழுத்தி, அவர்கள் தலையில் குட்டி, கேவலமாகப் பேசி வேதனைப்படுத்தினாயே. **அவை ஒவ்வொன்றும் இயேசுவை சிலுவையில் அறைந்திருக்கிறது** என்றார். ஜெவ்றி அமைதியாயிருந்தான்.

நாட்கள் கடந்து சென்றன. ஜெவ்றி அழகான வாலிபனானான். அவன் தாய் ஜெவ்றி **"இனியும் நீ சிறு பிள்ளை அல்ல, நீ வாலிப பிராயத்துக்குள் வந்துவிட்டாய். இயேசு சுவாமியின் ஆலோசனையும், பாதுகாப்பும் உனக்கு**

**வேண்டும். ஆகவே இந்த உனது வாலிப காலத்தில் இயேசுவை நினை"** என்றாள். அவனோ அதற்குச் செவிகொடுக்கவில்லை. தனது படிக்கும் காலத்தை முடித்த ஜெவ்றி காவல் படைக்குச் செல்ல ஆயத்தமானான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படி அவனது தாய் கெஞ்சினாள். ஜெவ்றிக்கோ மனதில்லாமல் போயிற்று. அவன் தாய் அவனுக்கு ஒரு சிறிய புதிய ஏற்பாட்டைக் கொடுத்து எப்பொழுதும் உன்னுடைய ஷேட் பொக்கட்டில் இதை வைத்துக் கொள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை எடுத்து வாசி என்று கொடுத்தாள். அவன் தனது ஷேட் பொக்கட்டில் வைத்துக் கொண்டாலும் அதை வாசிக்கவேயில்லை.

படையில் சேர்ந்த ஜெவ்றிக்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. ஒரு நாள் எதிரியைத் தாக்குவதற்காக இவனது படை சென்றது. பல பக்கத்தாலும் குண்டுகள் பறந்தன. திடீரென்டு ஒரு குண்டு அவனது மார்பில் பட்டதால் அவன் கீழே விழுந்தான். தான் மரித்துவிடுவேன் என்று நினைத்து அதிர்ச்சியடைந்தான். ஆனால் வலி தெரியவில்லை. அவன் மெதுவாக எழுந்து நடந்ததை அறிந்து கொண்டான். அந்தக் குண்டு புதிய ஏற்பாட்டைத் துளைத்துச் சென்று அதனுள் தங்கிவிட்டது. தன் உயிரைக் காத்த புதிய ஏற்பாட்டை பயபக்தியோடு திறந்தான். அந்தக் குண்டு **யோவான் 3:16**இல் வந்து நின்றிருந்தது.

**தேவன் தம்முடைய ஒரே மகன் இயேசு கிறிஸ்துவை உலகத்திற்குக் கொடுத்து நேசித்ததையும், அவரை விசுவாசிக்கிறவர்கள் நரகத்திற்குச் செல்லாமல் பாதுகாக்கப்படுகிறார்கள்** என்பதையும் வாசித்தான். இவ்வளவு அன்பான இயேசுவிற்கு விரோதமாய் தான் நடந்து கொண்டதை நினைத்து மனம் கசந்து அழுதான். தனது தகப்பனாரின் வார்த்தைக்குத் தான் கடினமாய் நின்றதையும், தன் தாயை அலட்சியம் செய்ததையும், தன் நண்பர்களுக்குச் செய்த அநியாயமான செயல்களையும் நினைத்த அவன் இருதயம் நொருங்கியது. போர்க்களத்திலேயே இயேசுவிடத்தில் மனந்திரும்பி தனது இருதயத்தில் அவரை ஏற்றுக் கொண்டான்.

பிரியமான பிள்ளைகளே உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாமல் வேதப்புத்தகத்தை வாசியுங்கள். நீங்கள் நரகத்திற்குப் போகாதபடி அது உங்களைப் பாதுகாக்கும்.

**என் மகனே உன் தகப்பன் புத்தியைக் கேள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே — நீதிமொழிகள் 1:8**



# உன் துக்கத்தையும் சந்தோஷமாக மாற்றுவார்

▢ பர்னபா




இன்று அனேக மக்கள் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்க முடியாமல் பலவிதமான துன்பங்களினாலும், பிரச்சினைகளினாலும், தீராத வியாதிகளினாலும், குறைவுகளோடும் கேள்விக ளோடும் போராட்டங்களோடும் அவமானத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கவலைகளோடும், துக்கம் நிறைந்தவர் களாகவும் என்ன செய்வது என்று தெரியாமல் அவற்றிலிருந்து விடுதலை பெறாமல் தமது வாழ்க்கை யில் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பல வழிகளை தேடி அதிகமான பணத்தினை செலவு செய்தும் அதைப் பெற்றுக் கொள்ள முடியாமல் நிம்மதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலையும் செய்து கொள்கிறார்கள்.

அன்பான சகோதரனே, சகோதரியே நீயும் கூட சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ள பல முயற்சிகளை எடுத்தும் சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல் பல கேள்விகளோடு வாழ்ந்து கொண்டி ருக்கிறாயா? அல்லது சாபங்களினாலும் பாவங்களினாலும் கட்டப்பட்டு உன் வாழ்க்கையில் நின்மதியை இழந்தவர் களாக வாழ்கின்றீர்களா?

**உங்கள் பாடுகளை ஏற்றுக் கொண்டு, உங்களுக்கு சமாதானத்தை உண்டுபண்ணவும் உங்கள் துக்கத்தை அவர் (இயேசு) சுமந்து கொண்டார். எனவே உன் துக்கத்தை இயேசுவால் மட்டும் தான் போக்க முடியும் என்ற விசுவாசத்தோடு நம்பிக்கையோடு அவரைத் தேடுவாயானால் உன் துக்கத்தை நிச்சயம் சந்தோஷமாய் மாற்றுவார்.**

பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் காணப்படும் ஒரு சம்ப வத்தைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

எப்பிராயீம் என்னப்பட்ட மலை தேசத்தில் உள்ள சோம்பீம் என்னும்

ஊரில் எல்க்கான என்னப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்கு பெனின்னாள், அன்னாள் என்னும் இரண்டு மனைவிகள் இருந்தார்கள். பெனின்னாளுக்கு பிள்ளைகள் இருந்தார்கள், அன்னாளுக்கோ பிள்ளைகள் இல்லை.

எல்க்கான வருஷந்தோறும் கர்த்தரைப் பணிந்து கொள்ளும்படியாகவும் பலி செலுத்தும்படியாகவும் சீலோவுக்கு போய் வருவான். இப்படிப் போய் வரும் போதெல்லாம் பெனின்னாள் என்ன செய்வாள் என்றால், அன்னாளுக்குப் பிள்ளையில்லாதபடியால் அவள் துக்கப்படும்படியாக அவளை விசனப்படுத்துவாள். அதனால் அன்னாள் சாப்பிடாமல் அழுதுகொண்டேயிருப்பாள்.

அவள் கணவனாகிய எல்க்கான அன்னாளை ஆறுதல்படுத்துவான். ஆனால் அவளின் துக்கத்தைப் போக்க அவனால் முடியாமல்போய்விட்டது. **அன்னாள் தனது துக்கத்திற்கும், மன வேதனைக்கும் பதில் எந்த மனுஷனாலும் கொடுக்கமுடியாது, அதற்கு தேவனால் மட்டும் தான் பதில் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையோடு தேவனைத் தேடினாள்.**

பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் படுகின்ற அவமானம், நிந்தனைகள், போராட்டங்களுக்கும் மனுஷனுக்கு முன்பாக அழுவதைவிடவும் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக அழுது புலம்புங்கள்! அப்போது நிச்சயம் உங்களுக்கு பதில் தருவார்.

**அன்னாள் தேவ சமூகத்தில் மனம் கசந்து மிகவும் அழுது வேண்டுதல் செய்தாள். அவள் தன் இருதயத்தில் தேவனோடு பேசினாள். அவள் உதடுகள் மாத்திரம் அசைந்ததே தவிர சத்தம் எதுவும் கேட்கப்படவில்லை. அன்னாள் வெகுநேரம் இப்படி ஜெபிப்பதை பார்த்த தேவமனுஷனாகிய ஏலி அவள் வெறித்திருக்கிறாள் என்று நினைத்து, எதுவரைக்கும் வெறித்திருப்பாய், உன் குடியை உன்னைவிட்டு விலக்கு என்றார். அதற்கு அன்னாள் சொன்னாள்: நான் அப்படிப்பட்டவள் இல்லை, நான் மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் என் இருதயத்தை தேவனுக்கு முன்பாக ஊற்றினேன் என்றாள். அப்போது ஏலி அவளைப் பார்த்து, நீ சமாதானத்தோடே போ, நீ தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி தேவன் உனக்கு கட்டளையிடுவார் என்றான். அதன் பிற்பாடு அன்னாள் துக்கமுகமாய் இருக்கவில்லை. அவளது வேண்டுதலை தேவன் கேட்டு பதில் கொடுத்தார். அவளுடைய துக்கம் சந்தோஷமாக மாறியது. (1சாமுவேல் 1:1-20)**

எனக்கு அருமையான சகோதரனே சகோதரியே நீயும் இப்படியாக தீராத மனபாரத்தோடும் வேதனையோடும் கண்ணீரோடும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். துக்கத்தினால் நீ விடுகிற பெருமூச்சை ஒருவேளை உன் குடும்பத்தில் உள்ளவர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். **ஆனால் உன்னைப் புரிந்து கொள்ளக்கூடியவர் தான் இயேசு கிறிஸ்து.** அன்னாள் தேவனைத் தேடியதைப் போன்று நீயும் உண்மையாக அவரைத் தேடினால் அவர் உன் துக்கத்தையும் சந்தோஷமாக மாற்றுவார். இயேசு கிறிஸ்து சொல்கிறார்: **யோவான் 16:24 கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.**




# மைல்ட்ரெட் கேபிள்

## 1878 - 1952



### கூடினால் கோடி நன்மை

குழு முயற்சி பல வெற்றிகளைத் தரும். இதை நம் வாழ்க்கையில் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

முப்புரிநூல் சீக்கிரமாக அறாது என்று வேதாகமம் கூறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக பணி செய்தவர்களே மைல்ட்ரெட் கேபிள், ஈவா பிரெஞ்ச் மற்றும் பிரான்ஸெஸ்கா பிரெஞ்ச்.

இம் மூன்று பெண்மணிகளும் வீரப்பெண்மணிகள். கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு, தங்களை ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள். அழிந்து போகும் ஆன்மாக்களை நினைத்து அனுதினமும் அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தவர்கள். தங்கள் வாழ்வையே தியாகம் செய்தவர்கள்.

மைல்ட்ரட் கேபிள் 1878ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தவர். ஊழிய பாரத்தை சிறுவயதிலேயே பெற்றதால் இந்தியாவிற்கு வர விரும்பினார். ஆனால் கடவுளின் திட்டம் வேறுவிதமாக அமைந்தது. தன்னுடைய ஆசைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆண்டவரின் சித்தத்திற்கே முதலிடம் கொடுத்தார்.

1902ஆம் ஆண்டு சீன தேசத்திற்கு அழைப்பை பெற்று மிஷனெரியாக சென்றார். அங்கு ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்த ஈவா பிரெஞ்ச் என்பவருடன் தன்னை இணைத்துக் கொண்டு ஊழியம் செய்ய ஆரம்பித்தார். பின்னர் ஈவாவின் தங்கையும் இவர்களுடன் வந்து சேர குழுவாக செயற்பட

ஆரம்பித்தனர். தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் கூடாரங்களை அமைத்து அவ்விடங்களிலுள்ள மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தனர். பள்ளிக்கூடங்களை அமைத்து மக்களின் கண்களைத் திறந்தனர்.

1923ஆமே அண்டு காஞ்சோ என்ற இடம் நோக்கி பயணம் செய்தனர். பின்னர் கோபி பாலைவனத்திற்கு சென்று நாமெடிக் பழங்குடிகள் மத்தியில் எட்டு வருடங்கள் அம் மக்களின் துணைவர்களாக வாந்தனர்.

36 வருடங்களுக்குப் பின் இங்கிலாந்து திரும்பிய அவர்கள் இங்கிலாந்தில் மாபெரும் எழுப்புதல் நடைபெறக் காரணமானார்கள்.


**அன்பரே! தனித்து செயற்படமுடியவில்லையாயினும் குழுவாக செயற்படலாமல்லவா?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நீ சத்தியத்தை பேசுவது சிலருக்கு கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அதுவே உன் இஷ்டமாக இருக்க வேண்டும்.

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 30**

---

# ஜோனத்தான் கோபோர்த்
# 1859 - 1936



## ஆண்டவர் ஆற்றல் தருவார்

மிஷனெரிப் பணி. அது உயிரைப் பணம் வைத்து செயற்படும் பாடுகள் நிறைந்த பணி. பிறர் உயிர் வாழ தன்னுயிர் கொடுக்கும் தியாகப்பணி. பெறுவதும், இழப்பதும் இதில் சகஜம். மிஷனெரிகள் ஒவ்வொருவரும் இழப்பிற்கு பெயர் போனவர்கள்.

1888ஆம் ஆண்டு தன் மனைவியுடன் பயணத்தை ஆரம்பித்தார் ஜோனத்தான் கோபோர்த். கனடா நாட்டிலிருந்து சீனா நாட்டை நோக்கிய பயணம் அது. மிகுந்த தாகத்துடனும், மாபெரும் தரிசனத்துடனும் சீனாவை அடைந்தார்.

சுவிசேஷப் பணிக்கான இடங்களைத் தெரிவு செய்தார். ஊர் ஊராக, தெருத்தெருவாகச் சென்று பிரசங்கம் செய்ய வேண்டும் என்பதே இவரின் திட்டமாகும்.

மிஷனெரிப் பணியில் வசதிகளைத் தேடி ஓட முடியுமா? சுகாதார சீர்கேடுகள் இவரையும், குடும்பத்தையும் தாக்க ஆரம்பித்தது. இரத்த பேதி

நோயினால் முதல் குழந்தையை இழந்தார். இரண்டாவது குழந்தை உடல் செயற்பாடு இழப்பினால் மரித்துப்போனது. ஓர் அறியப்படாத நோயினால் மூன்றாவது குழந்தையும் மரித்துப்போனது. ஒன்றன்பின் ஒன்றாகத் தனது ஆறு குழந்தைகளையும் இழந்தார்.

வாழ்க்கையின் இழப்புக்களால் வேதனை அடைந்த அவரை வேத வசனங்களே ஆறுதல்படுத்தியது. தன் இழப்பை பெரிதுபடுத்தாமல் மீண்டும் இறைபணியைத் தொடர்ந்தார். பலமுறைகள் சீன மக்களால் தாக்கப்பட்டார். நோய் நொடிகளால் தன் பலத்தை இழந்தார். பல இடங்கள் மாறியதால் அவர் உடல் சோர்வு கொண்டது.

"பாக்சர் யுத்தம்" என்று சொல்லப்படும் சீனப் போரில் படுகாயம் அடைந்தார். எத்தனையோ உபத்திரவங்கள் ஏற்பட்ட போதும், ஆயிரக்கணக்கான மக்களை இரட்சிப்பிற்குள் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார்.

அயராத உழைப்பினாலும், வயோதிபத்தினாலும் பார்வைகள் மங்கி இழந்து போன நிலையிலும் பரமனின் பணி செய்தார்.

**அன்பரே! ஆற்றல் தரும் ஆண்டவரை உறுதியாக பற்றிக் கொண்டுள்ளீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** தேவனுக்கென்று பெருங்காரியங்களை செய்வதில், முதலில் அவரை பூரணமாக நம்ப வேண்டும் — மேக் டொனால்டு

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 10**

---

# இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"தாய் ஒரு இராஜாவுக்கு அந்தரங்க ஆலோசனைக்காரி; மகள் இரண்டு இராஜாக்களுக்கு ஆலோசனைக்காரி; பின்பு தானே இராஜ்ஜியம் முழுவதையும் ஆண்டு அநேகரை கொலை செய்தாள். தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்" என்னும் மொழிக்கேற்ப தாயை மிஞ்சிய மகள் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

---

அனல் 2019 பங்குனி – சித்திரை மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**அப்போஸ்தலனாகிய பவுல்** (அப். 7:58, 16:22, 18:6, 20:33, 14:14, 11கொரி 11:27

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி 91

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 01 | 02 | | | | | | 03 |
| | | | | | | | | 04 |
| | | | 05 | | | | | 06 |
| 08 | | | | | | | | 07 |
| | | | | 09 | | | | |
| | | | | | | | 10 | |
| | | | | 11 | | | | |
| | 14 | 13 | | | | | 12 | |
| 15 | | | | | | | | |

**இடமிருந்து வலமாக**

02. நீ மிகவும் பிரியமானவன் என்று கர்த்தருடைய தூதனால் சாட்சி பெற்றவன்
05. பரியாசக்காரனை கண்டிக்கிறவன் .................. அடைகிறான்
09. நீதிமானுடைய ........................ பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்
11. சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் எனக் கூறியவன்
15. பார்வோன் யோசேப்புக்கு சூட்டின பெயர்

**வலமிருந்து இடமாக**

03. என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று கர்த்தரிடம் சாட்சி பெற்றவன்
04. புத்தியில்லாத பறவை
07. இந்த வம்சத்தில் சப்தி குறிக்கப்பட்டான்
10. பிடித்திருந்த சால்வையை கிழித்ததால் தன் இராஜ்யபாரத்தை இழந்தவன்
12. கழுதையின் பச்சைத் தாடையெலும்பை வைத்து பலரைக் கொன்றவன்

**மேலிருந்து கீழாக**

01. இருதயமானது இதைப் பத்திரமாய் காத்துக்கொள்ள வேண்டும்
05. நியாயத்தீர்ப்புக்கு முன்பாக மேன்மை பாராட்டுவது
06. ஆண்டவர் இவரை புஸ்தகச் சுருளை சாப்பிடச் சொன்னார்

**கீழிருந்து மேலாக**

08. நம்முடைய ஆத்துமாவிற்கு இது இன்பமாயிருக்கிறது
13. இந்த தீர்க்கதரிசி கேபார் நதியண்டையிலே இருக்கும் போது ஒரு தரிசனத்தைக் கண்டார்
14. பிடரி முறிந்து மரித்தவன்
15. பதினான்கு நாள் பண்டிகை நடத்தின ராஜா




❒ போதகர் வே.மகாராஜா




பலவேளைகளில் அனேகருடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் சத்தம் கேட்பது ஏளனமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை அது ஜீவனுள்ளது, அது என்றுமே மாறாதது. தேவனுடைய வார்த்தைகள் மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படி கொடுக்கப்பட்டவைகள். அவை எம்முடைய நல்வாழ்வுக்காக கொடுக்கப்பட்டவைகள். எனவே எங்களுடைய வாழ்க்கையில் இந்த வார்த்தைகள் அனுதினமும் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் கர்த்தருடைய வசனத்தை புறம்பே தள்ள வேண்டாம். பேதுரு ஆண்டவரை அறிகிற சந்தர்ப்பத்திலும், அறிந்த பிற்பாடும் அவர் விட்டுவிட வேண்டிய காரியங்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருக்குச் சொல்லிக் கொடுத்தார். அது பேதுருவினுடைய வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக

**இருந்தது.** எங்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்வோமாயிருந்தால் அது உண்மை யில் நிறைவான, சிறப்பான ஆசீர்வா தத்தை எங்களுடைய வாழ்க்கையில் கொண்டு வரும்.

## 1. உன்னுடைய முயற்சியை விட்டுவிடு; என்னுடைய முயற்சியோடு இணைந்து கொள். உனக்கொரு பெரிய எதிர்காலம் உண்டு!

லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் ஆண்டவர் பேதுருவை அழைக்கிற சந்தர்ப்பம் சொல்லப்படுகிறது. ஆண்ட வர் பேதுருவிடம் வந்து உரையாடிய போது பேதுருவின் வார்த்தைகள் எப்படி யிருந்தது என்றால், **"நாங்கள் எவ்வளவு முயற்சி பண்ணியும் ஒன்றும் கிடைக்க வில்லை"** என்பதாக காணப்பட்டது. **லூக்கா 5:5 அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்மு டைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.** பேதுருவைக் குறித்து சொன்னால், அவன் கடலைக் குறித்து மிகுந்த அனுபவம் உள்ள ஒருவன். சுருக்கமாக சொன்னால் "கடலிலே பிறந்து; கடலிலே வளர்ந்தவன்" என்று சொல்லலாம். அப்படியென்றால் கடலைக் குறித்து அவனுக்கு சொல்லவே தேவையில்லை. பலவேளைகளில் நாம் யோசிக்க வேண்டும், **நாம் இதுவரை பெற்றுக் கொண்ட அனுபவத்தைப் பார்க்கிலும் சிறப்பான அனுபவத்தை இயேசு கிறிஸ்துவால் எமக்குத் தரமுடியும்.** இதுவரை தேவனுக்காக, தேவசமூகத்திலே, தேவபிள்ளைகளாக எத்தனையோ அனுபவங்களுக்குள் கடந்து வந்திருக்க முடியும். உங்கள் தேவைகள் சந்திக்கப்பட தேவன் அற்புத மான வழிகளை உங்களுக்கு காண்பித் திருக்க முடியும். ஆனால் இதைவிடவும் சிறப்பான அனுபவம் தேவனிடத்தில் உண்டு. நாம் தேவனைப் பார்க்கிற போது அவரை உயர்த்தியே பார்க்க வேண்டும். பேதுரு கிறிஸ்துவை உயர்த்திப்பார்க்கிற மனநிலையுள்ளவனாக இருந்ததால் இயேசு சொன்னபோது; **"ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படி வலையைப் போடுகிறேன்"** என்று தாழ்மையோடு அதை அப்படியே ஏற்றுக்கொண்டான்.

உன்னுடைய முயற்சி, உன்னுடைய பிரயாசம், உன்னுடைய பெலத்தைப் பிரயோகிக்கிறவிதம் இவையெல்லாம் உன்னுடைய வாழ்வில் சிறப்பாக இருந் திருக்கிறது. இதன் பின்பு தான் ஊழியத் திற்கு அழைக்கப்போகிறார். ஒன்றை சுட்டிக்காட்டுகிறார்; நீசிறப்பான தொழிலாளி, பண்புள்ள மனிதன். (எப்படியென்றால் இராமுழுவதும் கஷ்டப்பட்டோம், ஒன்றும் கிடைக்கவில்லை ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படி செய்கிறேன் என்று சொன்னான்.) நாங்களாக இருந்தால் இராமுழுவதும் கஷ்டப்பட்டேன் ஒன்றும் கிடைக்கவில்லை, இப்போது வந்து நீர் என்ன சொல்கிறீர்? என்று எரிந்து விழுந்திருப்போம். **எனவே, பண்பு நிறைந்த ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ கற்றுக்கொண்ட மனிதன் பேதுரு.** ஆனாலும் அதற்குள் இன்னொன்று இருந்தது என்னவென்றால், **ஆண்டவரு டைய மேன்மையான அனுபவத்திற்குள் செல்கிற செயல் வரவேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார்.** நாங்கள் தேவனு டைய உறவில், தேவனை சம்பந்தப்பட்ட

காரியங்களில் ஒருவேளை வளர்ந்திருக்கலாம், அதில் சிறப்பானவர்களாகக் கூட இருக்கலாம். ஆனாலும் எங்களுக்குரிய இன்னுமொன்று இருக்கிறது, தேவனிடத்தில் போகத்தக்க சிறப்பான அனுபவமும் ஒன்று உண்டு. அதைத் தருகிற போது தட்டாமல் அதைப் பெற்று எங்களுக்கு ஏற்கனவே இருந்த அனுபவத்தோடு இதனையும் கூட்டிக்கொண்டால் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தில் எம்மை பிரயோஜனம் உள்ளவர்களாய் மாற்றுவார்.

**தேவன் எங்களுக்குத் தருகிற புதிய அனுபவங்களை ஒருபோதும் தட்டக் கூடாது. இல்லையென்று சொல்லவே கூடாது. எனக்குத் தெரியும் ஆண்டவரே, ஆனாலும் உம்முடைய வார்த்தையின்படி செய்கிறேன் என்று சொல்லுங்கள்.** ஆண்டவருடைய வார்த்தையின்படி பேதுரு வலையைப் போட்ட போது திரளான மீன்கள் அகப்பட்டது. **பேதுருவினுடைய வாழ்க்கையில் இவ்வளவு காலமும் அவனுடைய அறிவுக்கு எட்டிய அனுபவமும், அறிவுக்கெட்டிய முயற்சியும் நடந்தது. ஆனால் இயேசு சொன்ன போது அறிவுக்கப்பாற்பட்ட அனுபவமும், அறிவுக்கப்பாற்பட்ட முயற்சிக்குள்ளும் போனான்.** கிறிஸ்துவை எங்களுடைய தெய்வமாக ஏற்றுக்கொண்டால் எந்த வொருதடையுமில்லாமல் அவருடைய நடத்துதலுக்குள் நாங்கள் எங்களை அர்ப்பணிக்க வேண்டும். தேவனுடைய சாட்சிக்காக எங்களை அணிப்படுத்துகின்ற வேளை அவரைப் பற்றிய அறிவைப் பெற்று, அவரைப் பற்றி அறிவிப்பதற்காக எங்களை தயார்ப்படுத்துகிற காலம் சிறந்த காலம் ஆகும். **எனவே கிறிஸ்துவினுடைய பாதத்தில் அமர்ந்திருக்கக்கூடியவர்கள் அவருடைய பாதத்தில் அமர்ந்திருங்கள். தேவனோடு ஆவியிலே உறவாடக்கூடியவர்கள் ஆவியில் உறவாடுங்கள். உங்களுடைய நேரங்களை, காலங்களை வீணடிக்க வேண்டாம். உங்களுடைய நேரங்களை தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதற்கு விட்டுக்கொடுங்கள்.**

இயேசு பேதுருவின் அருகில் வந்தார். பேதுரு தேவனுடைய வார்த்தையில் சங்கமித்தான். அப்போது தான் அவனுடைய வாழ்க்கையில் மாற்றம் வந்தது. **நீ உன்னுடைய முயற்சி, உன்னுடைய தெரிவு, உன்னுடைய செயல் எல்லாவற்றையும்விட நான் இன்னும் செய்யப் போகிற பெரியவைகளை நீ காண்பாய் என்று ஆண்டவர் கற்றுக்கொடுத்தார்.** உங்களில் எத்தனைபேர் சோர்ந்துபோய், மனம் உடைந்தவர்களாய், என்னுடைய வாழ்க்கையில் நான் ஏன் இப்படி வேதனைப் படுகிறேன்? ஏன் இப்படியொரு துன்பம்? இப்படி ஒரு கஷ்டம்? இப்படி ஒரு வியாதி? என்று ஒருவேளை யாருக்கும் தெரியாமல் உங்கள் தலையணையை கண்ணீரால் நனைத்துக் கொண்டிருக்க முடியும். ஒருவருக்கும் சொல்ல முடியாமல் உங்களுடைய ஏக்கங்களை உங்களுடைய இருதயத்தில் வைத்து கதறிக்கொண்டிருக்க முடியும். யோசித்துப் பாருங்கள், ஆண்டவரே உம்முடைய வார்த்தைக்கு எங்கே நான் கீழ்ப்படியாமல் போனேன்? உம்முடைய திவ்விய சத்தத்தை எங்கே நடைமுறைப்படுத்தாமல் போனேன்? என்று கேளுங்கள். ஏனென்றால் இயேசு சொன்னவுடன் பேதுரு அதை நடைமுறைப் படுத்தியதால் உடனே ஆசீர்வாதம் கிடைத்தது.

பலவேளைகளில் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையை உதாசீனம் பண்ணுகிறார்கள். ஆனால் தேவன் ஒன்றைக் கற்பிக்க விரும்புகின்றார்: ஒருவேளை நாம் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிள்ளைகளாக பிறந்திருக்க முடியும் அல்லது **உங்களுடைய இரட்சிப்பு உறுதியானது என்ற நம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியும். ஆனால் அதற்குள்ளும் தேவனுடைய முயற்சிக்கு எங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்காத எதாவது ஒரு சந்தர்ப்பம் இருந்தாலும் எங்களுடைய வாழ்வில் பெரிய ஆசீர்வாதக் குறைவு காணப்பட்டுக் கொண்டேயிருக்கும். தேவன் நடத்தும் வழியில் நாம் முயற்சி பண்ணுவதே சிறப்பான ஒரு ஆசீர்வாதத்திற்கான பாதை.** ஆண்டவர் பேதுருவுக்கு ஆரம்பத்திலே கற்றுக்கொடுத்த ஒன்று **"நீ உன்னுடைய முயற்சியை அல்ல, தேவனுடைய முயற்சியில் உன்னை இணைத்துக் கொள்".** இந்த வேளை நீங்களாய் முயற்சிபண்ணி களைத்துவிட்டீர்களா? உங்களுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய முயற்சியில் நீங்கள் உங்களை விட்டுக்கொடுங்கள். எத்தனையோ எதிர் பார்ப்புகள், வாழ்க்கையை, தொழிலை, கல்வியை குறித்த கண்ணோட்டங்கள் உங்களுக்கு இருக்கலாம். அது நல்லது ஆனால் ஒன்று **அவையெல்லாவற்றையும்விட சிறப்பான கண்ணோட்டத்தை இயேசு வைத்திருக்கிறார். நீங்கள் உங்களைக் குறித்து நினைத்திருக்கிற நினைப்பைவிட உங்களைக் குறித்து சிறப்பான நினைவு தேவனிடத்தில் உண்டு.**

**உங்களுடைய வாழ்வில் இருக்கிற குறைவைக் குறித்து நீங்கள் அழுது கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அந்த குறைவு நிறைவாவதற்குரிய சிறப்பான நோக்கம் தேவனிடத்தில் உண்டு.** உங்களை துன்பப்படுத்துகிற அந்த நிகழ்விற்குள் இருந்து வெளியே வருவதற்குரிய சிறப்பான முயற்சி இயேசுவினிடத்தில் உண்டு. நாங்கள் செய்ய வேண்டியது, அந்த முயற்சிக்கு எங்களைக் கீழ்ப்படுத்துவதுதான். **உங்களுடைய ஆசீர்வாதத்திற்கு உங்களிடம் முயற்சி உண்டு அனால் நீங்கள் செய்கிற முயற்சியைவிட சிறப்பான முயற்சி இயேசுவிடம் உண்டு.** எனவே உங்களுடைய ஒவ்வொரு நாளையும் ஜெபத்தோடு ஆரம்பியுங்கள். உங்களுடைய வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் தேவனுடனான உறவில் இருக்கட்டும். ஏனென்றால் கிறிஸ்து உங்கள் அருகில் இருந்தால் உங்கள் முயற்சிகள் சரியானதாக இருக்கும். இடது புறமோ வலது புறமோ சாயும் போது அதுவல்ல வழி, இதிலே நடவுங்கள் என்று சொல்லித்தருவார். **தேவனுடைய முயற்சிக்கு எங்களை விட்டுக்கொடுத்தால் உலகத்தில் வாழ்வதற்குரிய ஆசீர்வாதமும் கிடைக்கும்; தெய்வீக ஆசீர்வாதமும் கிடைக்கும்.** ஆகவே குறைவுகளை நின்னைத்து அழுவதை நிறுத்திவிடுங்கள். இன்றைக்கு அழுகின்றீர்களா? தேவன் உங்களுக்காக முயற்சியை செய்கிற போது நீங்கள் ஏன் அழவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு உங்களை விட்டுக்கொடுத்துப்பாருங்கள் உங்களுக்கு அற்புதம் நடக்கும்.

## 2. அன்பான முறையில் தேவ சித்தத்தை தடுக்காதே.

இயேசு தான் எருசலேமுக்கு சென்று அங்கே படப்போகிற பாடுகளைக் குறித்து சொன்ன போது, **மத்தேயு 16:22 அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டு போய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.** பேதுரு இயேசுவோடு அன்பாக இருந்தவன். பேதுரு நல்ல திறமை சாலியாக இருந்தான். அன்புள்ளவர்கள் கடிந்து கொள்வார்கள் ஆனால் பேதுரு இயேசுவின் மேல் வைத்த அன்பை பிசாசு பிடித்துக் கொண்டான். இந்தக் காரியத்தில் தான் கிறிஸ்தவர்கள் பெரிய தவறை விடுகிறார்கள். அது யாருக்கும் தெரியாது, தேவனுடைய நல்ல காரியத்திற்காக சொல்கிறான். எங்களுக்கு இப்படி நடந்தால், எனக்காக கதைத்தான் என்று சொல்வோம். **இந்த அன்புள்ள நல்ல வார்த்தைக்குள்ளாய் மறைந்திருக்கிற நரித்தனத்தை ஆண்டவர் கண்டார். அன்புக்குரியவர்கள் உனக்கு ஆசீர்வாதமாக, நன்மைக்காக பேசினாலும் தேவசித்தம் உடைக்கப்படுகிறதா?** என்பதைப்பார் என்று ஆண்டவர் பேதுருவுக்கு கற்பித்தார்.

**நீ அன்பாய் பேசுகிறாய் ஆனால் தேவ சித்தத்தை உடைக்கிறாய்! என் மீது காண்பிக்கிற பரிவின் மூலம் தேவ திட்டத்தை உடைக்கிறாய் என்று இயேசு காண்பிக்கிறார்.** பலவேளைகளில் தேவ சித்தம் துன்பமானது தான், தேவ சித்தம் துன்பத்தின் வழி தான் அதற்காக இன்பமான, எம் சார்பிற்கு நன்மை போல வரும் வார்த்தைக்குள் சாத்தானின் திட்டத்தை நீ கண்டுகொள் என்று ஆண்டவர் பேதுருவிற்கு சொல்கிறார். யோசேப்பிற்கு தேவ சித்தம் துன்பமாகவே வந்தது. *எகிப்தில் பிரதம மந்திரியாக வரவேண்டும் என்றால் இங்கே இருந்து விமானத்தில் தான் சென்றிருக்க வேண்டும். ஆனால் எகிப்திற்கு பிரதம மந்திரியாக வர வேண்டியவர் எப்படிச் சென்றார் என்றால், தன் சொந்த சகோதரரால் விற்கப்பட்டுப்போனார். சென்ற இடத்திலும் துன்பம், அந்த துன்பத்திற்குள் தான் தேவ சித்தம் நிறைவேறிக் கொண்டிருந்தது.* அன்பான வார்த்தைகள் நல்லது, எங்கள் மீது பாசம் காண்பிப்பது நல்லது ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள் சத்துருவின் திட்டம் என்னவென்றால், **சில அன்பு பாசங்களுக்குள்ளாய் தேவ சித்தத்தை உடைப்பான். ஆவிக்குரிய ரீதியில் எப்போதும் தெளிவாய் இருங்கள்.**

**மத்தேயு 16:23a அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்.** அவர் பேதுருவைப் பார்த்து சொல்லவில்லை, பேதுருவின் அன்பை, பரிவை ஆட்கொண்டு தேவ சித்தத்தை உடைக்கும்படி இயேசுவை ஏவும்படி பேதுருவுக்குள் இருந்து செயற்பட்ட சாத்தானை பார்த்துதான் சொன்னார். ஒரு ஆவிக்குரிய தெளிவு கிறிஸ்தவர்களுக்கு வேண்டும். ஒரு வார்த்தை பேசும் போது அவர்களுடைய நோக்கம் என்னவென்று புரிந்து கொள்கிற ஆவிக்குரிய தன்மை ஓரளவாவது வேண்டும். வேதம் சொல்கிறது, கடைசி நாட்களில் பிசாசு

எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகிறான் என்று. பிசாசு விழுங்குவது என்றால் நாம் நினைக்கிறோம் பிசாசின் வாய்க்குள் போவது மட்டும் தான் என்று. அப்படியில்லை பிரியமானவர்களே, **அவன் எங்களுடைய அன்பு நிறைந்த சுபாவத்தைப் பிடித்துக்கூட எங்கள் தேவ சித்தத்தை உடைக்க முடியும். எங்களது இரக்க குணத்தைப் பிடித்துக்கூட தேவ சித்தத்தை உடைக்க முடியும்.** எனவே பிசாசு எப்படிப்பட்ட விதத்தில் அணுகினாலும் அதை இனங்கண்டு கொள்ளக் கூடிய ஆவிக்குரிய தெளிவை தேவ பிள்ளைகள் இந் நாட்களில் பெற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, கிறிஸ்து அருகில் இருந்த போது, தேவ பிரசன்னத்தில் இருந்த பேதுருவினுடைய சிந்தனைக்குள் சாத்தான் புகுந்து, அவனுடைய அன்பைப் பிடித்து தேவனுக்காக வாழும் வாழ்க்கையைப் பிடித்து தேவனுடைய சித்தத்தை உடைக்க முயற்சி செய்ய முடியும் என்றால் நாங்கள் தேவனோடு உறவாடி, வேதத்தை வாசித்து எத்தனை நாட்கள், பிசாசு எங்களுடைய சிந்தையை ஆட்கொள்ளக்கூடிய நிலையில் அநேகர் இருக்கின்றோம். ஆகவே நாம் இயேசுவோடு கூட நடந்து, கிறிஸ்துவின் அன்பில் நிலைத்து, கிறிஸ்து காண்பிக்கிற ஆன்மீக அறிவொளியைப் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சத்திலே பிசாசு கொண்டு வருகிற சதித்திட்டங்களை, நாச மோசங்களை, எங்களுடைய வாழ்க்கையை சிதறடிக்கிற சத்துருவை இனங்கண்டு நாம் தேவ சித்தத்திற்காய் வாழ வேண்டும். அதற்காக எங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

**பேதுருவே நீ அன்பான முறையில் பரலோக தேவ சித்தத்தை தடுக்காதே. நீ என் மீது கொண்ட நேசத்தை வைத்து சத்துரு உன்னை தாக்க இடங்கொடுக்காதே என்று காண்பிக்கிறார்.** பிசாசு எங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ள பல தந்திரங்களை வைத்திருக்கிறான். நாம் அவைகள் ஒன்றுக்குள்ளும் சிக்காது தேவ பிரசன்னத்தில் அவைகளை இனங்கண்டு கொள்ள வேண்டும், வெற்றி கொள்ள வேண்டும். பேதுருவாலே அதை இனங்கண்டு கொள்ளவில்லை. **நாம் கடைசியாக தனியாக ஜெபித்து எத்தனை நாட்கள்? எப்படி பிசாசின் தந்திரங்களை இனங்கண்டு கொள்ளப் போகிறோம்? கர்த்தர் கிருபையாய் இரங்குவாராக.**

பலவேளைகளில் யாராவது தீமையாக துன்பப்படுத்தக்கூடிய விதத்தில் பேசினால் தான் இடறல் என்று நினைப்போம். ஆனால் பேதுருவுக்கும் இயேசுவுக்கும் இடையே நடந்த சம்பாசனையை வைத்துப் பார்க்கும் போது கரிசனை, அன்பு, பாசம் போன்ற பேச்சுக்களுக்குள்ளும் தேவ சித்தத்தை உடைக்கிற செயல் உண்டு. சிலவேளை நாம் யாராவது பேசிவிட்டால் அல்லது துன்பமான செயலைச் செய்துவிட்டால் இடறல் வந்துவிட்டது என்று நினைப்போம். **ஆனால் இடறல் என்பது அன்பான வழியிலும் வரும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். தேவ சித்தத்தை நடக்கவிடாமல் இருப்பது இடறல்.** பேதுரு அன்பான வழியில் தேவ சித்தத்தைத் தடுக்கவந்தான். பிரியமானவர்களே நாங்கள் இதைக் கண்டு கொள்ள வேண்டும். இதுவரைக்கும் ஆண்டவர் உங்களுக்கு அனுமதித்த துன்பத்தை

தாண்டி வந்துவிட்டீர்களா? தாவீது சொல்கிறார்: "நான் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து, அதை நீரூற்றாக்கிக் கொண்டேன்" தாவீது தனது கண்ணீரை நீரூற்றாக்கிக் கொண்டார். அவருக்குத் தெரியும் இதுதான் தேவ சித்தம் என்பது. தாவீது அதைவிட்டு ஓடவில்லை அல்லது அதற்காக வேறு ஒன்றை செய்யவு மில்லை. மாறாக அதற்குள்ளாகவே கடந்து சென்றார்.

இன்றைக்கு நீங்கள் அழுது கொண்டிருக்கிறீர்களா? ஆண்டவரிடம் கேளுங்கள், ஆண்டவரே உம்முடைய கிருபையில் இதைக் கடப்பதற்கு பெலன் தாரும் என்று. ஒருவர் சொன்னார், அன்னாள் அழுகையின் பள்ளத்தாக்கில் உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொண்டாள். அந்த நீரூற்று சாமுவேல் என்று. அவள் அழுது கொண்டிருந்தாள், அதைத் தாங்கிக் கொண்டாள், அதைக் கடந்து வந்தாள். அன்னாள் இவற்றைச் செய்யாமல் தனது கணவன் மேல் பழியை போட்டுவிட்டு, வீட்டை விட்டு வெளியே சென்றிருக்கலாம். *எனக்குத் தெரியும் ஒரு சகோதரரின் வாழ்க்கையில் தொடர்ச்சியான வேதனை. நாம் யாரும் பிரவேசிக்காத அளவு துன்பம். ஆனால் அவரோ பேசும் போது, அந்த வேதனைக்குள்ளும் தேவனைக் குறித்த நல்ல சாட்சியைச் சொல்லிக் கொண்டேயிருப்பார்.* **உங்களுடைய வாழ்க்கையில் துன்பத்தோடு இருக்கிறீர்களா? ஆண்டவரிடம் சொல்லுங்கள், ஆண்டவரே இந்த துன்பத்தை உம்முடைய பெலத்தோடு கடப்பேன், எனக்கு வந்த கண்ணீர்களை எல்லாம் நீர் ஆனந்தக் கண்ணீராய் மாற்றுவீர், உங்களுடைய வாழ்க்கையில் சிறப்பான ஆசீர்வாதத்தை பெறவேண்டும் என்றால்: தேவனுடைய முயற்சிக்கு உங்களை விட்டுக் கொடுங்கள்,** அடுத்து அன்பான முறையில் தேவ சித்தத்தை உடைக்கிற எதுவந்தாலும் அதை இனங்கண்டு கொள்ளுங்கள்.

இதுவரை நாம் எந்த வழியில் தேவ சித்தத்தை உடைத்திருக்கிறோம்? சிலர் உங்களைக் கடிந்து கொண்டால் இவன் முன்பு போல இல்லை என்று சொல்லா தீர்கள். முன்பு போல இல்லை என்பதை நாங்கள் விட்டுவிட்டு நான் முன்பு போல இல்லை. அது தான் முன்பு போல இல்லை என்று யோசித்தால் தேவனுடைய சித்தத்திற்குள் தொடர்ந்து நாம் பிரகாசிக்க முடியும். குற்றத்தை மற்றவர்கள் மீது போடவேண்டாம். என் மீது போட்டேன் என்றால் அப்போது தேவ சித்தம் நிறைவேறும்.

**துன்பமான முறையிலும் தேவ சித்தம் வரும்; அதை இன்பமான முறையில் யாரும் கொள்ளையடிக்காமல் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் காத்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார்.**

**எனவே நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும், எங்களுக்கு ஒருவர் மீது இருக்கிற அன்பு, நேசம், பரிவு போன்றவற்றை பிசாசு கைக்கொண்டு அந்த அன்புக்கூடாக தேவ சித்தத்தை உடைக்க அவன் முயற்சிப்பான்.** எனவே எப்போதும் தெளிவுள்ளவர்களாய், ஆவியில் நிறைந்தவர்களாய் தேவனுடைய வார்த்

தையின் வெளிச்சத்தில் வாழப்பழகுகிற போது அப்படியான தந்திரங்களில் இருந்து எங்களைக் காத்துக் கொள்ள முடியும். இதற்கு வேதத்தில் இருக்கிற நல்லதொரு உதாரணம், இந்தப் பூமியில் முதலாவது பாவம் புகுந்தது, அதற்கு சத்துரு ஆதாமின் மனைவியைப் பிடித்தான். **ஆரம்பத்தில் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயலாற்ற, நெருங்கிய உறவின் நிலை, மிகவும் அன்பு கூருகிற ஒரு நிலை. அந்த நிலையில் பிடித்து தேவசித்தத்தை உடைத்தான்.** எனவே தேவனுடைய சித்தம் என்பது நாம் நேசிக்கிற எல்லாரையும்விட முதன்மையாக நேசிக்கப்பட வேண்டியது. அது தான் ஆண்டவர் சொன்னார், உங்களுடையகணவனையோ, மனைவியையோ, பிள்ளைகளையோ, பெற்றோரையோ, யாரையாவது என்னிலும் அதிகமாக நேசித்தால் அவன் எனக்கு சீஷனாய் இருக்கமாட்டான் என்று. ஏன் தெரியுமா? **முதலாவது என் மீது நேசம் இருந்தால் தான் தன்னுடைய சித்தத்தை ஒரு மனிதனால் நிறைவேற்ற முடியும் என்பது தேவனுக்குத் தெரியும்.**

சத்துரு ஏவாளுடன் பேசும் போதே அவர்கள் சார்பாக அன்பாக பேசினான். ஆனால் இந்தக் காரியத்தில் ஒரு காரியத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தேவனைவிட நாங்கள் மிக அதிகமாக யாரை நேசிக்கிறோம்? யாரில் அன்பு கூருகின்றோம்? அந்த நேசங்களைக் குறித்துக் கூட ஒவ்வொரு ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் தெளிவாக இருக்க வேண்டும். **ஏனென்றால் அவர்கள் பக்கம் தவறு இருக்க முடியாது, அவர்கள் அப்படி யோசிக்கமாட்டார்கள். ஆனால் நன்மை செய்கிற விதத்தில் சத்துரு ஒரு தூண்டுதலை கொடுப்பான்.** இதிலே விளிப்பாக இருக்காவிட்டால் விழுந்துபோய்விடுவோம். **எப்போதும் தேவனை முதன்மையாக நிறுத்தி அவரையே பார்க்கிற போது நாம் விழுந்து போகாமல், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியும். சிலவேளை சில அன்புகள், பாசங்கள், நேசங்கள் கூட கர்த்தருடைய கட்டளைகளை மறைக்க அல்லது மறந்து போகப்பண்ணும்.** எனவே ஆவிக்குரிய கண்களோடு அவைகளைப் பார்க்க வேண்டும். நீங்கள் பிள்ளையாக, பெற்றோராக, கணவன் அல்லது மனைவியாக இருக்கலாம். **ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் நீங்கள் நேசிக்கிறவர்கள் மூலம் வருகிற காரியங்கள் எனக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கிற உறவை உடைக்கிற சூழ்நிலையை உருவாக்குமென்றால் அதைக் கண்டு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

இயேசுவைச் சாத்தான் சோதிக்கிற போது அன்பாகப் பேசி, வேத வசனத்தைக் காண்பித்துக் கதைத்தான். ஆனால் இயேசுவுக்குத் தெரியும் அவையெல்லாம் தேவ சித்தத்திற்கு புறம்பானது என்பது. எனவே அப்பாலே போ சாத்தானே என்று அவனை விரட்டினார். அதில் தோற்றுப் போன பிசாசு பின்பு அவருடைய நெருங்கிய சீஷரைக் கொண்டு பேசிப்பார்த்தான். அதிலும் அவன் தோற்றுப்போனான். எந்தப் பக்கத்தாலும் சத்துரு ஆண்டவரோடு உங்களுக்கு உள்ள உறவை உடைக்க முயற்சித்தாலும் நீங்கள் அதை இனங் கண்டு கொள்ள வேண்டும்.

## 03. உலகம் போகின்ற போக்கில் நீ போகாதே.

**யோவான் 13:6-8a (6.) அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்த போது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். 7. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். 8. பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான்.** பேதுரு ஏன் அப்படிச் சொன்னான் என்றால், இயேசு ஆண்டவர், பெரியவர், போதகர் என்று பார்த்தான். இப்படிப்பட்ட பெரிய ஆண்டவர் என் கால்களைக் கழுவுவதா? என்ற மனநிலை அவனுக்குள் இருந்திருக்கிறது. அது சரியான மனநிலை தான். சாதாரணமாக உலகத்தின் பார்வையும் இதைப்போலத்தான் இருக்கும். **பேதுருவுக்கு ஆண்டவர் கிறிஸ்தவ வாழ்வுக்குள் காட்ட வேண்டிய இன்னொன்றை செயலின் மூலம் காண்பித்தார். அதாவது உலகம் போகிற போக்கில் நீ போகக்கூடாது என்பதைக் காண்பிக்கிறார்.**

உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக் கூடாது என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்தில் எத்தனையோ விதமான மக்கள் கூட்டத்தினர் இருக்கிறார்கள். அந்தந்த இடங்களில் இருந்து ஆண்டவர் தனக்கென்று ஒரு கூட்ட மக்களை பிரித்தெடுக்கிறார். வட்டம் வட்டமாக நிறைய ஜனக்கூட்டம் உண்டு. ஒருவன் இரட்சிப்படையும் போது ஒரே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படுகிறான். அப்படியென்றால் பிரித்தெடுத்து புறம்பான ஒரு வட்டத்திற்குள் தான் வருகிறோம். நீங்கள் எந்த வட்டத்தில் இருந்து வந்தாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட புதிய வட்டத்திற்குள் இருக்கிறீர்கள். இந்தப் புதிய வட்டத்திற்குள் வந்தவர்களின் செயல்முறைகள் பிற்பாடு அந்த பழைய வட்டத்தோடு இணைக்கப்பட ஒருபோதும் முடியாது. **ஆண்டவருக்குத் தெரியும் தனக்கு சாட்சியாக நிற்கப் போகிற ஒரு மனிதன் எந்த விதத்திலும் தவறுவிடக்கூடாது என்பதற்காய் கிறிஸ்தவனாக வாழ வேண்டிய முறை இது தான் என்று வாழ்ந்து காட்டினார்.**

*ஒரு செய்தியில் பார்த்தேன், கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது, அதில் ஜனங்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரு பெரியவர் இருக்கிறார், அவரின் காலைக் கழுவி அந்த தண்ணீரை கீழே இருக்கும் ஒருவர் குடிக்கிறார். அவர் அவரை மேன்மைப்படுத்துகிறேன் என்பதைக் காண்பிப்பதற்காக செய்தார்.* இயேசு கிறிஸ்து இப்படிச் செய்யும்படி சொல்லவில்லை. ஆனால் உலகத்தில் அதுதான் நிலை. பெரியவர்களின் கால்களை சிறியவர்கள் கழுவுவது. **இயேசு கற்பித்தார் நீ பெரியவனானாலும் சிறியவனின் கால்களைக் கழுவு என்பதை. வருங் காலத்தில் உன்னுடைய காலை யாரும் கழுவாவிட்டாலும் நீ மற்றவர்களுடைய காலைக் கழுவ வேண்டும்** என்று இயேசு பேதுருவுக்கு கற்றுக்கொடுத்தார். கிறிஸ்தவனாய், திருச்சபையின் ஆரம்ப தூணாய் இருக்கப்போகிற நீ செய்ய வேண்டிய வழிமுறை உண்டு. அது

என்னவென்றால், கிறிஸ்தவம் என்பது உலகத்தின் பார்வைக்கு நேர் தலை கீழானாது. எவ்வளது தாழ்மையாக, தேவனுக்காக வாழ முடியுமோ அவ்வளவு தாழ்மையாக வாழ்வது தான் கிறிஸ்தவம். இயேசு பரலோகத்தி லிருந்து பூமிக்கு வந்ததே மிகப்பெரிய தாழ்மை. மனிதனாக வந்தவர் மனித னின் காலைப்பிடித்தார். கிறிஸ்தவத்தின் சாரம்சம் எதுவென்பதை இயேசு வாழ்ந்து காட்டினார். இயேசு கீழ்ப்படிவைப்பற்றி சொல்லும் போது அவர் கீழ்ப்படிந்து காண்பித்திருக்கிறார். முன்மாதிரியாக வாழ்ந்து காண்பிக்க வேண்டும் என்று சொல்ல முன்பு அவ்வாறு வாழ்ந்து காண்பித்திருக்கிறார். எனவே கிறிஸ்த வம் என்பது பேச்சிலே அல்ல பெலத்தி லேயே தங்கியிருக்கிறது. பெலன் என்று சொல்லும் போது அது எங்களுடைய நடைமுறை வாழ்க்கையிலே கலந்த தாக இருக்க வேண்டும் என்று இயேசு தன்னுடைய செயலின் மூலம் பேதுரு வுக்கு காண்பித்தார்.

கிறிஸ்தவம் என்பது சாதாரணமாக வாழ்ந்து விட்டுப் போகவேண்டியது இல்லை. மாறாக கிறிஸ்தவம் என்பது நிறைவேற்றி முடிக்க வேண்டிய பகுதி களைக் கொண்டது. அவைகளில் தவறும் போது உண்மை கிறிஸ்த வனாக, உண்மை ஊழியனாக வாழ முடியாது என்பதை இயேசு பேதுருவுக்கு செய்த செயலின் மூலம் காண்பிக்கிறார். **யோவான் 13:13-14 (13.) நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவ ரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். 14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டா னால், நீங்களும் ஒருவருடைய கால் களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.** காலைக் கழுவுவதின் தாற்பரியம் என்னவென்றால், கிறிஸ்தவர்கள் எந்த நிலையிலும் எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் மேன்மைக்காக எங்க ளைத் தாழ்த்துவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் பூரணத்துவத்திற்காக, கிறிஸ்தவ வாழ் வின் முதிர்ச்சிக்காக எங்களை எப்போதும் தாழ்த்துவதற்குரிய உன்னத நிலையில் வாழ வேண்டும் என்பது தான் அந்த அர்த்தம். இதை நாங்கள் செய்ய வேண்டும் இல்லையென்றால் எங்களு டைய வாழ்வு உண்மையான கிறிஸ்தவ தன்மையோடு செல்ல முடியாது. எங்கு பார்த்தாலும் பெருமை, தேவன் புரட்டிப் போட்டவைகளை திரும்ப கட்டுகிற முயற்சிகள், தேவன் குலைத்துப்போட்டவை களை திரும்ப சரிபண்ணுகிற சில பெருமைகள் நடைபெற்றுக்கொண்டி ருக்கிறது. இப்படியானவர்கள் ஒரு போதும் பரலோகம் செல்ல முடியாது. தேவனுடைய பிள்ளைகளாகவும் இருக்க முடியாது.

யோசித்துப்பாருங்கள் எந்த கட்டத் தில் தேவன் கற்பித்ததற்கு எதிராக செயற்பட்டிருக்கிறோம்? சில சந்தர்ப்பம் சூழ்நிலை உருவாகிற போது நாங்கள் எப்படியானவர்கள் என்பதை அது காண்பிக்கும். சிலவேளை தேவையற்ற முயற்சிகள் எல்லாம் செய்வோம். ஏனென்றால் எங்களைத் தாழ்த்த முடியாமல் இருப்பதினால் தான். தேவன் எங்களைப் பரிசுத்த ஜாதியாக வைத்தி ருக்கிறார். இந்த பரிசுத்த ஜாதிக்கு, நாம் விட்டுவந்த பாவ ஜாதியோடு எங்களுக்கு இனித்தொடர்பில்லை. கிறிஸ்தவம்

**என்பது உலகம் பார்க்கிற வண்ணமாக இல்லை; மாறாக கிறிஸ்தவம் என்பது தேவன் பார்க்கிற பிரகாரமாக இருக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய வாஞ்சையாக இருக்கிறது.**

## 04. என்னுடைய வாக்குத்தத்தங்களை மறந்துபோகாதே; நான் நினைத்தது நடந்தே தீரும்.

**யோவான் 21:1-3 (1.) இவை களுக்குப் பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத் தின விவரமாவது: 2. சீமோன்பேது ருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானா கிய நாத்தான்வேலும், செபெதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது, 3. சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனே கூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார் கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.** ஆண்டவர் பேதுருவை முதல் தடவை அழைத்த போதும் மீன் ஒன்றும் பிடிக்காமல் நின்றான். அப்பொழுது ஆண்டவர் படகை ஆழத்திற்கு கொண்டு போகச் சொன்னார். இந்த அற்புதம் நடைபெற்ற பின்பு ஏறத்தாள மூன்றரை வருடங்கள் பேதுரு இயேசுவோடு கூட இருந்தான். ஆண்டவர் செய்த அற்புத அடையாளங் களைக் கண்டு கொண்டான். இயேசு மறுரூபமாகும் போது இயேசுவோடு கூட இருந்தான். இப்படிப்பட்ட அற்புதங் களைக் கண்டு கொண்டவன் இங்கே சோர்ந்து போய்விட்டான். நொந்து, உடைந்து போய்விட்டான். ஆண்டவர் சொன்னார், உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக மாற்றுவேன் என்று. அதையெல்லாம் மறந்து மறுபடியும் மீன்பிடிக்கப் போகிறான்.

**நான் மரித்து, மறுபடியும் உயி ரோடு எழும்புவேன்** என்று சொன்ன ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களை யெல்லாம் மறந்து போனான். பேதுரு வுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறார் என்றால் **தேவன் உனக்குத் தந்த வாக்குத்தத்தங்கள் ஒரு போதும் பொய் சொல்லாது. அதை நிறைவேற்றி** முடிப்பேன் என்பதை நீ கற்றுக்கொள் என்று சொன்னார். உங்களுடைய வாழ்வில் சோர்ந்து போய் இருக்கிறீர் களா? தேவன் தந்த வாக்குத்தத்தங்கள் ஒரு போதும் பொய் சொல்லாது. ஒருவேளை சோர்ந்து போய், தேவன் தந்த வாக்குத்தத்தங்களை மறந்து, தேவன் என்னைக் கைவிட்டுவிட்டார் என்ற வேதனையோடு கூட நீங்கள் இருக்கலாம். வாழ்க்கையில் நன்மை இல்லை, சந்தோஷம் இல்லை, எப்போது பார்த்தாலும் வேதனைக்குரியதாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்க முடியும். ஆனால் ஒன்றை சிந்தித்துக் கொள்ளுங்கள். **உங்களை அழைத்த தேவன் அவர் உண்மையுள்ளவர். வேதம் சொல்கிறது அவர் முடிவு பரியந்தம் உங்களை நடத்துவார். தேவன் உங்களைக் கைவிடவே மாட்டார்.**

ஆரம்பத்தில் பேதுருவுக்கு அவனு டைய முயற்சிகள் கைகூடாமல் இருந்த போது ஒரு புதிய முயற்சியைக்

கொடுத்தார். அந்த முயற்சியின் மூலம் ஆசீர்வாதமான அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் இங்கே மறுபடியும் வந்து நிற்கிறான். அன்றைக்கு நான் சொன்னதை, உன்னுடைய வாழ்வைக் கொண்டு நிறைவேற்றுவேன் என்பதை வெளிப்படுத்துவதற்காக இயேசு மறு படியும் வந்து நிற்கிறார். நீங்கள் சிந்தியுங்கள் தேவன் உங்களுக்குத் தந்த வாக்குத்தத்தம் என்ன? அவர் எப்படிப்பட்ட தெய்வம் என்பதை புரிந்து கொண்டிருந்தீர்கள்? இப்போது எப்படி இருக்கிறீர்கள்? ஆண்டவர் சொல்கிறார்: உங்களுடைய சோர்வுகளைவிட்டு எழும் புங்கள், உங்களுடைய வேதனைகளை என் மீது வைத்துவிடுங்கள். நான் தந்த வாக்குத்தத்தங்களை நினைத்துக் கொள்ளுங்கள். ***T.L.*ஒஸ்பென் என்று சொல்லப்படுகிற மிகவும் வல்லமை யான ஊழியக்காரன் இருந்தார். அவர் தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருந் தார்; தேவன் ஒரு மனிதனுக்கு வாக்குத்தத்தைக் கொடுக்கும் போது அந்த வார்த்தைக்குள் நிறைவேறத் தக்க அளவு வல்லமையும் அடங்கியி ருக்கிறது. தேவன் ஒரு வாக்குத்தத் தத்தை, வசனத்தை தரும் போது அந்த வசனத்திற்குள் நிறைவேறத்தக்க அவ்வளவு வல்லமையும் நிறைந்திருக் கிறது**. தேவன் உங்களுக்கு தந்த வாக்குத்தத்தம் வெறுமையான ஒரு எழுத்து அல்ல, அது அழிந்து போகிற ஒரு காரியமல்ல. தேவன் நினைத்ததை நிறைவேற்றுவதற்காக தேவனுடைய வல்லமையால் நிரப்பப்பட்டதாக அந்த வசனம் இருக்கிறது. இனியும் சோர்ந்து போவீர்களா? ஆண்டவர் தான் சொன்னதை நிறைவேற்றுவேன் என்பதைக் காண்பிக்க வந்திருக்கிறார்.

நான் அழைத்தவர், உன்னை தெரிவு செய்த நான் உன்னை நடத்தப்போகிறேன் என்று மீன் ஒன்றும் அகப்படாமல் நின்ற பேதுருவிடம் இரண்டாந்தரம் வந்து நிற்கிறார். **யோவான் 21:4 விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதி ருந்தார்கள்.** சோர்ந்து போன இடத்தி லிருந்து திரும்ப அவனைத் தூக்கு வதற்காக இயேசு வந்து நிற்கிறார். நீங்கள் எந்த இடத்தில் விழுந்து போய், ஆண்டவரை நொந்து கொண்டிருக்கிறீர் கள்? இரட்சிப்பைவிட்டுவிடுவதற்கு எத்தனைபேர் முயற்சி செய்கிறீர்கள்? நான் தேவனைத் தேடியதால் எனக்கு ஒன்றுமில்லை, கிறிஸ்துவை நம்பினால் ஒன்றுமில்லாமல் போனேன் என்று எத்தனைபேர் நினைக்கிறீர்கள். இன்றைக்கு மறுபடியும் தேவன் சொன்ன வார்த்தையின்படி வாழவேண்டும் என்ற பெரிய நோக்கத்தோடு மறுபடி எங்களு டைய முயற்சிக்குள் வருவோம். ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் ஒரு போதும் பொய் சொல்லாது. உங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார், அவர் கடைசிவரைக்கும் உங்களைக்கைவிடவே மாட்டார். **யோவான் 21:15 அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக் கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.** கர்த்தருடைய வார்த்தை வீணிலே போகாது என்பதற்காய் மறுபடி எங்களோடு பேசுவார்.

**யோவான் 21:16-17 (16.) இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். 17. மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.** ஆண்டவருக்கு எங்களுடைய வாழ்வின் வேதனையான பகுதியும் தெரியும். தேவன் என்னை மறந்துவிட்டார் என்று பலவேளை நாம் நினைக்கிறோம். ஆனால் எங்களுடைய வாழ்வின் ஒவ்வொரு காரியமும் நன்மையானாலும் தீமையானாலும் தேவனுடைய ஞாபகத்தில் உண்டு. இயேசு மூன்று தரம் பேதுருவிடம் கேட்டதற்கு வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்கிற விளக்கம் என்னவென்றால், பேதுரு மூன்று தரம் இயேசுவை மறுதலித்ததற்குரிய பாவ அறிக்கை இது என்று சொல்கிறார்கள் அவனுடைய வாழ்வில் மறைந்திருந்த எல்லாவற்றையும் ஆண்டவர் கண்டிருக்கிறார்.

பேதுருவினுடைய வாழ்வில் ஆண்டவர் கற்பிக்க விரும்பியயாவையும் எங்களுடைய வாழ்விலும் கற்பிக்க விரும்புகிறார். தேவனுக்கு எல்லாம் தெரியும். நாம் செய்துவிட்டு அறிக்கை செய்யாத பாவம், பேதுருவிடம் பூமியிலே அந்த பாவத்தின் அறிக்கையை கேட்டுவிட்டார் அதே போல எங்களிடம் இங்கே கேட்கப்படவில்லை என்று யோசிக்கலாம். ஆனால் நாம் தான் அதை உணர்ந்து அறிக்கையிட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் எங்களோடு பேசிக்கொண்டிருப்பார். அவர் உணர்த்திக்கொண்டேயிருப்பார். ஆனால் நாம் தான் எம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டே இருப்போம். தேவன் வந்து கேட்க வேண்டும் என்று நினைப்போம். **இது தேவ ஆவியானவருடைய நாட்கள். பேதுருவைத் தூக்கி எடுத்த தேவன் எங்களையும் தூக்கி எடுக்கும்படியாய் இந் நாட்களில் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.** பாவங்களை தெரிந்து கொண்டும் செய்துவிட்டு பின்பு தெரியாமல் செய்துவிட்டேன் என்று சொல்லக்கூடாது. என்னுடைய வாக்குத்தத்தத்தை மறந்துவிடாதே! அது உன்னைக் கைவிடாது. அது தான் நினைத்ததை நடப்பித்தே தீரும். அதற்கு உன்னுடைய வாழ்க்கையை சரிசெய், மறைந்திருக்கிற பாவத்தை வெளியே கொண்டு வா என்று கற்பித்தார்.

1. தேவனுடைய முயற்சிக்கு உங்களை விட்டுக்கொடுங்கள்.
2. **அன்பான, நேசமான முறையில் தேவ சித்தத்தை உடைக்கும்படி வருகிற எல்லா தந்திரங்களையும் இனங் கண்டு கொள்ளுங்கள்.**
3. **உலகத்திற்கு ஒத்த வேஷம் போடாமல், உலகம் பார்க்கிற**


விதமாக பாராமல் நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வழியை கிறிஸ்து எங்களுக்கு கற்பித்திருக்கிறாரோ அதன்படி வாழ்வதை கற்றுக் கொள்வோம்.

4. ஆண்டவர் தந்த வாக்குத்தத்தங்கள் ஒரு போதும் பொய் சொல்லாது. தேவன் உங்கள் வாழ்வில் சொன்னதை, உங்கள் மீது கொண்ட சித்தத்தை நிறைவேற்றியே முடிக்கும்.

கர்த்தர் உங்களையும் பயன்படுத்துவார். உங்களையும் அவர் ஆசீர்வதிப்பார். நேசம் நிறைந்த ஆண்டவர் உங்களைத் தொடர்ந்து வழிநடத்தி ஒரு பெரிய சாட்சியுள்ள தேவபிள்ளைகளாய் உங்களை நடத்துவதற்காக உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

**“தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக”**

# வினா விடை - 93



01. தேவனிடத்தில் பொய் சொன்ன ஒரு மனிதன் யார்?

02. அப்.பேதுருவின் பாதத்தில் விழுந்து செத்த பெண் யார்?

03. “இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது” என்று சொன்னவர்கள் யார்?

04. அக்காளையும் தங்கையையும் விவாகம் பண்ணின புருஷன் யார்?

05. நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன் என்றது யார்?

06. “இந்த நாள் நெருக்கமும், கண்டிதமும், தூஷணமும் அனுபவிக்கிற நாள்” என்றது யார்?

07. “இதோ நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்” என்றது யார்?

08. ஒரு ராஜாவும் ஒரு தீர்க்கதரிசியும் ஒருமித்து ஜெபம் பண்ணினார்கள். அவர்கள் யார்?

09. “பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை” என்றது யார்?

10. “சூரியனுக்கு கீழே நூதனமானது ஒன்றுமில்லை” என்றது யார்?



# சந்தோஷம் இல்லை

## வேதப்பகுதி: மத்தேயு 5:1–11

நான்சியின் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. ஆனால் பிரியங்காவின் குடும்பம் மிகவும் வசதியானது. நான்சி தங்களைக் கடவுள் ஏழைகளாக வைத்துவிட்டார் என வருத்தப்படுவாள். ஒரு நாள் நான்சி வீட்டிற்கு பிரியங்கா வந்தாள். பிரியங்கா மிகவும் துக்கமாயிருந்தாள். ஏன் பிரியங்கா மிகவும் துக்கமாய் இருக்கிறாய்? என்று கேட்டாள் நான்சி.



எங்கள் வீட்டில் சந்தோஷமே இல்லை என்றாள் பிரியங்கா. ஏன் நீங்கள் பணக்காரர்கள் தானே என்று கேட்டாள் நான்சி. நாங்கள் பணக்காரர்கள் தான். ஆனால் எங்க அப்பாவும் அம்மாவும் எப்பொழுதும் சண்டை போடுகிறார்கள். எனவே எங்களுக்கு சந்தோஷமே இல்லை என்றாள் பிரியங்கா.

ஆம் பணம் மட்டும் இருப்பதே வசதியில்லை. நல்ல குணங்கள் இல்லாவிட்டால் எவ்வளவு பணம் இருந்தாலும் பிரயோஜனம் இல்லை.

**சிந்தனைக்கு:–** நல்ல குணங்கள் இல்லாதவர்கள் சந்தோஷமாயிருக்க முடியா, தேவனோடு இருப்பவர்களிடம் தான் சந்தோஷம் இருக்கும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜீலை 23

# 2019

## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

**வினாவிடை - 91**

எஸ்.டுமாலினி
பாண்டவெட்டை



**குறுக்கெழுத்துப் போட்டி - 90**

உ.சாத்ராக்
காரைநகர்

## குறுக்கெழுத்துப் போட்டி - 90, வினா விடை - 92

### சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**
01. ம.மதுசன்
02. பா.கோமதி
03. லோ.வதனி
04. பா.டிலானி
05. நா.கிறிஸ்தீனா
06. நா.கிருஷன்
07. நா.கிறிஸ்ரீன்
08. பா.அனுசியா
09. பா.அனுகரன்
10. வி.அனுராதா
11. ந.தயாழினி
12. நா.அன்னாள்
13. அ.கிருஷாந்தன்
14. த.எப்சிபா
15. அ.தெபோரா
16. த.சிவாஜினி
17. து.யோகேஸ்வரி
18. உ.சாத்ராக்
19. அ.எஸ்தர்

**பாண்டவெட்டை**
20. மு.ஜெசிந்தா
21. ம.நிம்சிகா
22. ம.சிவகௌரி
23. சி.சிவனேஸ்வரன்
24. சி.சுமித்திரா
25. எஸ்.டுமாழினி

**பள்ளிக்குடா**
26. இ.லக்சிகா
27. வெ.கனிநிலா
28.. க.கிறேஸ் கெற்சியாள்



**"பரலோக வீட்டிற்குச் செல்வதற்கு பூலோக வீட்டில் தூய்மையாக இருக்க வேண்டும்"**



# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 245.00 |
| இந்தியா (India) | 490.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1015.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 525.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 850.00 |

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:................................................................................

முகவரி:................................................................................

..........................................................................................

..........................................................................................

## ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 4:30 மணிக்கு

# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில்

அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்

**வியாதிப்பட்டவர்கள் தேவையுள்ளவர்கள் பிசாசின் பிடியில் உள்ளவர்கள்**

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது.
இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



To:

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351